**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2025**
**பயிற்சி வினாப் பத்திரம்**

**வணிகக் கல்வி I**

**இரண்டு மணித்தியாலங்கள்**

**அறிவுறுத்தல்கள்:**

- எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
- **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைத் **தரப்பட்ட புள்ளிக் கோட்டின்** மீது எழுதுக.
- **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் **தரப்பட்டுள் புள்ளிக் கோட்டின்** மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

1. பின்வரும் அட்டவணையின் A மற்றும் B நிரல்களில் இருந்து, மனிதத் தேவைகளானது எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றது என்பதுடன் தொடர்புடைய சரியான சோடியைத் தெரிவுசெய்க.

| | A | B |
|---|---|---|
| i. | வலு (சக்கி) | மின்சாரம் |
| ii. | போக்குவரத்து | நெடுஞ்சாலை |
| iii. | களியாட்டம் (பொழுதுபோக்கு) | உணவு |
| iv. | தொடர்பாடல் | தகவல் பரிமாற்றம் |
| v. | சுகாதாரம் | சிறந்த உடல்நலம் |

(-------)

2. பின்வருவன சில வித்தியாசமான வகையான கொடுக்கல்வாங்கல்கள் ஆகும்.

A. சச்சின், தனது தனிப்பட்ட மோட்டார் வாகனத்தினை சதூன் என்பவருக்கு ரூ 5 மில்லியனுக்கு விற்பனை செய்தார்.

B. நிமந்தா, மரக்கறிகளை தனது தோட்டத்தில் வளர்த்து அவற்றை தனது வீட்டில் நுகர்ந்தார்.

C. சிதும், குரக்கன் ரொட்டிகளை வீட்டில் தயார்செய்து அவற்றை தனது பாடசாலைச் சிற்றுண்டிச்சாலைக்கு ஒவ்வொரு நாளும் விநியோகம் செய்தார்.

D. சில்லறைக் கடையை நடாத்தும் நிசலா, நாளாந்தம் கடைக்கு வரும் வறியவர்களுக்கு உதவினார்.

E. சாகர மோட்டார் நிறுவனமானது சித்துமல் என்பவரின் தனிப்பட்ட பாவனைக்காக வாகனம் ஒன்றை விற்பனை செய்தது.

மேலே தரப்பட்ட கொடுக்கல்வாங்கல்களில் வணிகக் கொடுக்கல்வாங்கல்களை மட்டும் தெரிவுசெய்க.

i) A,E ii) B,C iii) CE iv) DE v) AD (-------)

3. கைத்தொழில் புரட்சியின் விளைவொன்றாகக் கருத முடியாதது

i) பேரளவிலான உற்பத்தி
ii) துணைச் சேவைகளின் அபிவிருத்தி
iii) தொழிற் பிரிப்பும் சிறப்புத்தேர்ச்சியும்
iv) இரட்டைப் பொருத்தம் (தற்செயலான ஒற்றுமை)
v) சர்வதேச வியாபாரம் (-------)

4. பின்வரும் அட்டவணையின் X நிரலானது வணிகச்சூழலின் வகைகளையும் Y நிரலானது வணிகச்சூழலின் காரணிகளையும் குறித்து நிற்கின்றது.

| X | Y |
|---|---|
| A. அகச் சூழல் | 1. நிறுவனம்சார் கலாசாரம் |
| B. மூடிய சூழல் | 2. சாத்தியமான வணிகர்கள் |
| C. பேரண்டச் சூழல் | 3. நிறுவனம்சார் வளங்கள் |
| | 4. பூகோளச் சூழல் |
| | 5. வழங்குனர்கள் |
| | 6. சமூக கலாசாரம் |

மேலே தரப்பட்ட நிரல்கள் சரியாகப் பொருந்தும் விடையானது,

i) A-3,5 B-2,4 C-1,6
ii) A-1,3 B-2,5 C-4,6
iii) A-1,2 B-3,4 C-5,6
iv) A-1,6 B-4,3 C- 2,3
v) A-2,4 B-1,6 C-3,5 (-------)

**5.** வணிகமொன்று பல்வேறு தரப்பினருக்கும் பல்வேறு சமூகப் பொறுப்புக்களையும் நிறைவேற்றுகின்றது
பின்வரும் சமூகப் பொறுப்புக்களிடையே வாடிக்கையாளரை நோக்கியதான சமூகப் பொறுப்பைத் தெரிவுசெய்க.

i) சமத்துவம்
ii) பொருளாதார நன்மைகளை அடைந்து கொள்ளல்
iii) கழிவுப்பொருள் முகாமைத்துவம்
iv) பசுமை உற்பத்திப்பொருட்கள்
v) நியாயமாக இருப்பது (-------)

6. இலங்கையில் களியாட்ட (பொழுதுபோக்கு) வரியை அறவிடும் நிறுவகம்

i) உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
ii) பொருத்தமான உள்ளூராட்சி அரச அமைப்புக்கள்
iii) கலால் திணைக்களம்
iv) சுங்கத் திணைக்களம்
v) மாகாண இறைவரித் திணைக்களம் (-------)

7. பின்வருவன நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாகச் செயற்படும் சில நிறுவகங்கள் ஆகும்.

A. பாவனையாளர் விவகார அதிகாரசபை
B. அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்
C. தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
D. பிரதேச சபைகள்
E. இலங்கைத் தர நிறுவகம்
F. பிணைகள் பரிமாற்று அணைக்குழு
G. மத்திய சூழல் அதிகாரசபை

இந்நிறுவகங்களுக்கிடையே நுகர்வோர் பாதுகாப்புடன் நேரடியாத் தொடர்புடையவற்றைத் தெரிவுசெய்க

i. ACD ii) ABF iii) DEG iv) AB v) AE (-------)

8. பின்வருவன வணிக நிறுவனங்கள் பற்றிய சில கூற்றுகள் ஆகும்.

1) வரையறுத்த பொதுக் கம்பனிகளானது, பட்டியற்படுத்தப்பட்ட மற்றும் பட்டியற்படுத்தப்படாத கம்பனிகள் என வகைப்படுத்தப்படும்.

2) வரையறுத்த தனியார் கம்பனிகளின் எண்ணிக்கையானது பொதுக் கம்பனிகளிலும் பார்க்க உயர்வானதாகும்.

3) தொழில்சார் பங்குடைமைகளில் ஆகக்கூடிய பங்காளர்களின் எண்ணிக்கைக்கு வரையறை இல்லை.

4) பங்குடைமை ஒன்று பதிவுசெய்யப்பட்டிருந்தாலும், அதன் பெயரானது சட்ட ஆளுமையைக் கொண்டிருக்காது.

5) ஒவ்வொரு பொதுத் துறை வணிகங்களினதும் நோக்கமானது இலாபத்தை உழைப்பதாகும்.

மேலே தரப்பட்ட கூற்றுக்களுக்கிடையே சரியான கூற்றுக்களின் எண்ணிக்கையைத் தெரிவுசெய்க.

i. ஒன்று ii) இரண்டு iii) மூன்று iv) நான்கு v) ஐந்து (-------)

9. தனியார் துறை, வரையறுத்த நட்டப்பொறுப்பு, சட்ட ஆளுமையைக் கொண்டிருத்தல் மற்றும் இலாப நோக்கற்ற வணிக நிறுவனங்களுக்கு உரித்தான வணிக நிறுவனங்களைக் கொண்டிருக்கும் விடையைத் தெரிவுசெய்க.

i) கூட்டுறவுச் சங்கங்களும் உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனிகளும்

ii) பங்குடைமையும் கூட்டுறவுச் சங்கங்களும்

iii) வரையறுத்த தனியார் கம்பனிகளும் உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனிகளும்

iv) உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனிகளும் தனியுடைமையும்

v) பொதுக் கம்பனிகளும் உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனிகளும் (-------)

10. முயற்சியாண்மை என்ற எண்ணக்கருவை உலகத்திற்கு அறிமுகப்படுத்திய இரண்டு பிரதான துறைகள்,

i) போக்குவரத்தும் தொடர்பாடலும்

ii) வியாபாரமும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பமும் ICT

iii) போர் வேலையும் கட்டட நிர்மாணமும்

iv) விவசாயமும் மீன்பிடியும்

v) சுகாதாரமும் கடல்வழி சார்ந்த நடவடிக்கைகளும் (-------)

**11.** சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களை விரிவாக்குவதற்கு ஒவ்வொரு அரசும் முயற்சிகளை மேற்கொள்கின்றன.

சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களை விரிவாக்குவதன் பிரதான நோக்கமானது

i) வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்

ii) தேசிய உற்பத்தியை அதிகரித்தல்

iii) பிராந்திய அபிவிருத்தியை உருவாக்குதல்

iv) முயற்சியாண்மை அபிவிருத்தி

v) பயன்படுத்தாத வளங்களை பயன்படுத்துவதற்கு (-------)

12. பணத்தின் நேரடித் தொழிற்பாடு

i) கணக்கீட்டு அலகாகவும் பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியமமாகவும் திகழ்தல்

ii) பரிமாற்று ஊடகமாகவும் பெறுமானத் திரட்டாகவும் திகழ்தல்

iii) கணக்கீட்டு அலகாகவும் பெறுமானத் திரட்டாகவும் திகழ்தல்

iv) பரிமாற்று ஊடகமாகவும் பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியமமாகவும் திகழ்தல்

v) கணக்கீட்டு அலகாகவும் பரிமாற்று ஊடகமாகவும் திகழ்தல் (-------)

13. வங்கிகளுடன் தொடர்புடைய கூற்றுகள் பின்வருமாறு

A. மாற்றத்தகாத காசோலைகளை எந்த வங்கியிலும் வைப்புச் செய்ய முடியும்

B. கணக்கு வைத்திருப்பவரின் பெயருடன் காணப்படும் ஒரு காசோலையை வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்ய முடியும்

C. உரிமம் பெற்ற வணிக வங்கிகள் மட்டுமே அந்நியச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட முடியும்.

D. நடைமுறைக் கணக்கை வைத்திருப்போர் எந்தவொரு பெறுமதிக்கும் காசோலையை வழங்க முடியும்.

E. காந்த மைத்தன்மை கொண்ட எழுத்துப் பகுதியில் (MICR) குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது விடயம் காசோலையின் இலக்கம் ஆகும்.

மேலே தரப்பட்ட கூற்றுகளில் சரியான கூற்றுகளைத் தெரிவுசெய்க.

i. ACD ii) BCD iii) CDE iv) ABE v) ACD (-------)

14. ரூ 10 மில்லியன் பெறுமதியான கப்பலொன்று பாதிப்பினால் ரூ 1மில்லியன் நட்டத்தை எதிர்கொண்டது. இக்கப்பலானது A,B மற்றும் C ஆகிய காப்புறுதிக் கம்பனிகளில் முறையே ரூ 5 மில்லியன், ரூ 3 மில்லியன் ரூ 2 மில்லியனுக்குக் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனியும் நட்டத்திற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டிய சரியான பெறுமதியைத் தெரிவுசெய்க.

i) A- 5 மில்லியன் B-3 மில்லியன் C-2 மில்லியன்

ii) A- 3.3 மில்லியன் B-3.3 மில்லியன் C- 3.3 மில்லியன்

iii) A- 5 இலட்சம் B- 3 இலட்சம் C- 2 இலட்சம்

iv) A-33.3 மில்லியன் B- 33.3 மில்லியன் C- 33.33 மில்லியன்

v) A- 1 மில்லியன் B- 1 மில்லியன் C- 1 மில்லியன் (-------)

15. அருணி, தனது திருமணத்தில் கலந்துகொள்ளுமாறு வருணி என்பவருக்கு கைப்பேசி மூலம் தகவல் வழங்கினார். தான் அதனை ஏற்றுக்கொள்வதாக கைப்பேசி மூலம் வருணி அவருக்குத் தகவல் வழங்கினார். அத்துடன் அழைத்தமைக்காக தனது வாழ்த்துக்களையும் அவருக்குத் தெரிவித்தார். மேலே தரப்பட்ட தொடர்பாடல் செயன்முறையின் பின்னூட்டலானது,

i) நன்றி மற்றும் வரவேற்கிறேன் (Thank you and welcome)

ii) அழைப்பிதழ் (Invitation)

iii) பயன்படுத்தும் கைப்பேசி

iv) திருமணத்திற்கான அறிவிப்பு

v) தொலைபேசி அழைப்பைப் பெற்றுக்கொள்ளல் (-------)

16. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உடைமையாண்மையைக் கைமாற்றுவதற்கு பயன்படுத்தப்படும் ஆவணம்

i) காப்புறுதிச் சான்றிதழ்

ii) இழப்பீட்டுக் கடிதம்

iii) இழப்பீட்டுச் சான்றிதழ்

iv) நாணயக் கடிதம்

v) வார்நாமம் (-------)

17. எந்தவொரு நிறுவனத்துக்கும் பொதுவானதல்லாத குணாம்சமானது

i) பொதுவான நோக்கத்தைக் கொண்டிருத்தல்

ii) மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்தல்

iii) நிறுவனக் கட்டமைப்பைக் கொண்டிருத்தல்

iv) இலாபம் உழைப்பதை உள்நோக்கமாகக் கொண்டிருத்தல்

v) மக்களைச் சேர்த்தல் (-------)

18. ஒவ்வொரு நிறுவனமும் ஒரு இலக்கைப் பின்தொடர்கின்றது. நிறுவனமொன்று தனது இலக்கை அடைவதற்கு எவ்வாறு தொழிற்படுகிறது என்பதைக் கண்டறிவது,

i) நெறிப்படுத்தல் (Leading) மூலம்

ii) தலைமைத்துவத்தின் மூலம்

iii) தொடர்பாடல் மூலம்

iv) முகாமைத்துவத்தின் மூலம்

v) கட்டுப்படுத்தல் மூலம் (-------)

19. மாணவர்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதில் மாணவத் தலைவர்களைச் சம்பந்தப்படுத்துவதற்காக பாடசாலை ஒன்றில் புதிய நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டது. மாணவத் தலைவர்களால் நிறைவேற்றப்படும் முகாமைத்துவ வகிபாகம் மற்றும் உப வகிபாகமாவது,

i) ஆளிடை வகிபாகத்தை நிறைவேற்றுதல் - தலைவராக

ii) தகவலளித்தல் வகிபாகத்தை நிறைவேற்றுதல் - கண்காணிப்பாளராக

iii) தீர்மானமெடுத்தல் வகிபாகத்தை நிறைவேற்றுதல் - முயற்சியாளராக

iv) தீர்மானமெடுத்தல் வகிபாகத்தை நிறைவேற்றுதல் - இடையூறுகளைக் கையாள்பவராக

v) தகவலளித்தல் வகிபாகத்தை நிறைவேற்றுதல் - முயற்சியாளராக (-------)

20. மல்சா என்பவர் செங்கல்லை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றை களனியில் செயற்படுத்தி வருகின்றார். அவரது உற்பத்தி தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:

உற்பத்தி அலகுகள் - 1000

அலகொன்றிற்கான நிலையான கிரயம் - ரூ.50

விற்பனைப் புரள்வு - ரூ.200000

மொத்த அலகுக் கிரயம் - ரூ. 150

இலாப நட்டமற்ற புள்ளியில் அலகுகளின் எண்ணிக்கை,

i) 50 அலகுகள்


ii) 500 அலகுகள்

iii) 5000 அலகுகள்

iv) 50000 அலகுகள்

v) 500000 அலகுகள் (-------)

21.




மேலே தரப்பட்டுள்ள வரைபடமானது சரக்கிருப்பு மட்டங்களுடன் தொடர்புடையதாகும். இவ்வரைபடத்தின் பிரகாரம் சுழற்சிக் காலம், பொருளாதார கட்டளைக் கணியம் (சிக்கனக் கட்டளைத் தொகை) மற்றும் மறு கட்டளை மட்டம் ஆகியவற்றுக்கான சரியான விடையானது,

i) 2 வாரங்கள், 100 அலகுகள், 300 அலகுகள்

ii) 8 வாரங்கள், 300 அலகுகள் , 400 அலகுகள்

iii) 4 வாரங்கள், 400 அலகுகள், 250 அலகுகள்

iv) 4 வாரங்கள், 300 அலகுகள், 250 அலகுகள்

v) 2 வாரங்கள், 400 அலகுகள், 250 அலகுகள் (-------)

22. அழகுக் கலை நிலையமொன்றின் (stall of beauty salon) கண்காட்சிக்கு வரும் சகல வாடிக்கையாளர்களுக்கும் தோலை வெண்மைப்படுத்துதல் (skin whitening) சிகிச்சையானது இலவசமாக வழங்கப்படும். மேலே தரப்பட்ட நிகழ்வுடன் தொடர்புடைய சந்தைப்படுத்தல் எண்ணக்கரு யாது?

i) சமூக சந்தைப்படுத்தல் எண்ணக்கரு

ii) வாடிக்கையாளர் எண்ணக்கரு

iii) முழுமைப்படைப்பு சந்தைப்படுத்தல் எண்ணக்கரு

iv) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு

v) விற்பனை எண்ணக்கரு (-------)

23. A மற்றும் B ஆகியோர் சந்தையில் இருக்கும் வாடிக்கையாளர்கள் ஆவர்.

A. விலை கூடிய உருப்படிகளைக் கொள்வனவு செய்ய முயற்சிப்பதுடன், அவ்வுருப்படிகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் திருப்தி அடைகின்றார்.

B. பொருத்தமான கொள்வனவை மேற்கொள்வதற்கு பொருளின் அளவையும் விலையையும் ஒப்படுகின்றார்.

இவ்வாடிக்கையாளர்கள் கொள்வனவு செய்வது என்ன வகையான உற்பத்திப்பொருட்கள் ஆகும்.

i) A- கடைப் பொருட்கள் B- விசேட பொருட்கள்

ii) A- விசேட பொருட்கள் B- வசதிப் பொருட்கள்

iii) A- வசதிப் பொருட்கள் B- கடைப் பொருட்கள்

iv) A- விசேட பொருட்கள் B- கடைப் பொருட்கள்

v) A- வசதிப் பொருட்கள் B- விசேட பொருட்கள் (-------)

24. பானுகா என்பவரின் மசாலா வணிகத்தின் (spice business) முன்னைய விற்பனையானது அவ்வாறே இருந்தபோதிலும் விற்பனைகளின் வேகம், வளர்ச்சி மற்றும் இலாப எல்லையானது குறைவடைந்து செல்வதனை அவர் அவதானித்தார். மேம்படுத்தல் நடவடிக்கைகளின் மூலம் விற்பனையின் அளவை அதிகரிப்பதற்கு அவர் முயற்சித்தார்.

மேலே தரப்பட்ட உற்பத்திப்பொருளானது உற்பத்திப்பொருள் வாழ்க்கை வட்டத்தின் எந்தக் கட்டத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

i) வீழ்ச்சிக் கட்டம்

ii) முதிர்ச்சிக் கட்டம்

iii) வளர்ச்சிக் கட்டம்

iv) அறிமுகக் கட்டம்

v) அபிவிருத்திக் கட்டம் (-------)

25. பின்வருவன நிதிச் சந்தையின் சில உப சந்தைகள் ஆகும். இவற்றுக்கிடையே மூலதனச் சந்தையுடன் மாத்திரம் தொடர்புடைய சந்தைகளைத் தெரிவுசெய்க.

i) வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தை

ii) வணிகத்தாள் சந்தை

iii) திறைசேரி உண்டியல்கள் சந்தை

iv) திறைசேரி முறிகள் சந்தை

v) அக அந்நியச் செலாவணிச் சந்தை (-------)

26. பின்வரும் நிதி மூலங்களுள் வெளிவாரி, நேர் நிதி மூலங்களை மட்டும் தெரிவுசெய்க.

i) பங்கு வழங்கல்

ii) கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவைத் தாமதப்படுத்தல்

iii) மேலதிக வளங்களை விற்பனை செய்தல்

iv) பெறுமானத்தேய்வுக்கான ஏற்பாடு

v) அட்டுறு செலவுகளை அதிகரித்தல் (-------)

27. குறித்தவொரு நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரிகள் ஐந்து பேரின் சேவைக் காலங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

| நிறைவேற்று அதிகாரிகளின் பெயர் | தரம் 11இற்கான சேவைக் காலம் | மொத்த சேவைக் காலம் |
|---|---|---|
| கசுன் | 08 | 24 |
| தசுன் | 12 | 20 |
| சதுன் | 07 | 23 |
| பஹூன் | 15 | 15 |
| நதுன் | 11 | 21 |

பதவி மூப்பு (seniority) அடிப்படையில் மட்டும் யார் தரம் 1 இற்குச் செல்வார்கள்.

i) கசுன்

ii) தசுன்

iii) சதுன்

iv) பஹூன்

v) நதுன் (-------)

28. நிறுவனமொன்றின் மனித வள முகாமைத்துவத்தில் பயிற்சி மற்றும் அபிவிருத்தி ஒரு முக்கியமான கருமமாகும்.

பயிற்சி மற்றும் அபிவிருத்தியின் குணாம்சங்களை முறையே உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவுசெய்க.

i) தொழிநுட்பத் திறன்கள் பயிற்சி, எண்ணக்கருவாக்கத் திறன்கள் பயிற்சி

ii) எதிர்கால வேலைக்காகத் தயார்செய்தல், தற்போதைய வேலைக்காகத் தயார்செய்தல்

iii) விசாலமான வீச்சில் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல், குறுகிய வீச்சில் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்

iv) முகாமைசார் ஊழியர்களை இலக்காகக் கொண்டது, முகாமைசாரா ஊழியர்களை இலக்காகக் கொண்டது

v) எண்ணக்கருவாக்கத் திறன்கள் பயிற்சி, தொழிநுட்பத் திறன்கள் பயிற்சி (-------)

29. கணினிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமை ஒன்றில் உள்ளடங்காத விடையைத் தெரிவுசெய்க.

i) மென்பொருள்

ii) வன்பொருள்

iii) தரவு

iv) பின்னூட்டல்

v) நிறுவனம்சார் உருப்படிகள் (-------)

30. பின்வரும் அட்டவணையின் X நிரலானது வணிகத் திட்டத்தின் பிரதான கூறுகளையும் Y நிரலானது கூறுகளில் காணப்படும் உள்ளடக்கத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

| X | Y |
|---|---|
| A. நிறைவேற்றுச் சுருக்கம் | 1.விற்பனை வருமானத்தையும் செலவுகளையும் எதிர்வுகூறுதல் |
| B. வணிகம் தொடர்பான விவரணம் | 2. கடனை திரும்பச் செலுத்துதல் பற்றிய குறிப்பு |
| C. சந்தைப்படுத்தல் திட்டம் | 3.. தூரநோக்கும் இலட்சியநோக்கும் |
| D. நிதித் திட்டம் | 4. நிறுவனக் கட்டமைப்பு |

After matching X and Y select the correct answer,

i) C-1, D-2, B-3, A-4

ii) D-1, B-2, C-3 A-4

iii) C-1, B-4, A-3, D-2

iv) A-1, B-2 D-3 C-4

v) D-1, A-2 B-3 C-4 (-------)

**<u>31 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதும்போது பொருத்தமான சொல் / சொற்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக</u>**

31) அ) பொருளாதாரமொன்றின் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்தின் இணைப்பு ………………………….. எனவும், வியாபாரம் மற்றும் துணைச் சேவைகளின் இணைப்பு …………………………. எனவும் அழைக்கப்படும்.

ஆ) வணிக வளங்களும் நிறுவனக் கட்டமைப்பும் …………….. சூழலுக்கு உரித்தானதாகும் அதேவேளை, வாடிக்கையாளர்களும் எதிர்கால முதலீட்டாளர்களும் …………… சூழலுக்கு உரித்தானவர்கள் ஆவர்.

32) அ) பண வழங்கலுக்கும் பணத்தின் பெறுமதிக்கும் இடையே …………………… தொடர்பு காணப்படும் அதேவேளை, பண வழங்கலுக்கும் பொது விலை மட்டத்திற்கும் இடையே …………………. தொடர்பு காணப்படுகின்றது.

ஆ) பொருளாதாரமொன்றில் ……………. விலை உறுதித்தன்மையின் மூலம் பணவீக்கம் கட்டுப்படுத்தப்படுவதுடன், ……………. விலை உறுதித்தன்மையானது அந்நியச் செலாவணி விகிதத்தை நிலையான மட்டத்தில் பராமரிக்கிறது

33) அ) பங்குடைமையின் உடைமையாளர்கள் ………………….. என அழைக்கப்படுவதுடன், கூட்டுறவுச் சங்கங்களின் உடைமையாளர்கள் ……………………. என அழைக்கப்படுகிறார்கள்.

ஆ) பொதுக் கம்பனிகளை ஸ்தாபிக்கக்கூடிய பிரதான வழிகள் …………… அல்லது …………….. பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் ஆகும்.

34) அ) வழங்கப்பட்ட காசோலை அச்சிடப்பட்ட குறியீட்டுடன் அல்லது காவியின் இரத்துச் செய்யப்படவில்லை என்பது ………………….. காசோலை ஆகும் அதேவேளை, காசோலைகளை எழுதும்போது வரைபவரால் விடப்படும் தவறுகள் ………………… தவறுகள் என அழைக்கப்படும்.

ஆ) நிதி நிறுவகங்களை மேற்பார்வை செய்வதுடன் சட்டபூர்வப் பொறுப்பை எடுத்துக் கொள்வது ……………………………. காணப்படும் அதேவேளை, பங்குச் சந்தையை ஒழுங்குபடுத்துவதுடன் கட்டுப்படுத்துவது ………………………………….. காணப்படுகின்றது.

35) அ) நிறுவனமொன்றின் உள்ளீட்டுக்கும் வெளியீட்டுக்கும் இடையிலான தொடர்பை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு எடுத்துக் காட்டுவது ……………………… ஆகும் அதேவேளை, விரும்பிய நோக்கங்களை அடைந்து கொள்ளும்போது குறைந்தளவான எண்ணிக்கையுடைய வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஆகக் கூடிய வெளியீட்டை அடைந்து கொள்ளும் ஆற்றல் …………………….. எனப்படும்.

ஆ) …………………………. திறன்கள் என்பது ஒரு நிறுவனத்தில் முகாமையாளர்களின் தனித்துவமான ஆற்றல்கள் ஆகும் அதேவேளை, ………………….. திறன்கள் என்பது சகல மட்டத்திலுள்ள முகாமையாளர்களும் கொண்டிருக்க வேண்டிய ஆற்றல்கள் ஆகும்.

36) அ) உண்மையான நிலைக்கும் எதிர்பார்க்கப்படும் நிலைக்கும் இடையிலான வேறுபாடு ……………….. என அழைக்கப்படும் அதேவேளை, ஏனைய மாற்றுத்தெரிவுகளில் (alternatives) இருந்து மிகவும் பொருத்தமான மாற்றுத்தெரிவு ……………………. ஏன அழைக்கப்படுகின்றது.

ஆ) நிறுவனமொன்றின் தூரநோக்கை மேலும் தெளிவாகவும் விரிவாகவும் எடுத்துக் காட்டுவது ………………… எனப்படும் அதேவேளை, ஒரு காலக்கெடுவுடன் அதை அளவு ரீதியாக வழங்குவது ………………… எனப்படும்.

37) அ) விமானப் படைக்கான சீருடைகள் உற்பத்தியானது ……………….. உற்பத்தி எனப்படும் அதேவேளை, ஒரே வகையான உற்பத்திப்பொருளைத் தொடர்ச்சியாக உற்பத்தி செய்வது …………… உற்பத்தி எனப்படும்

ஆ) மறு கட்டளை மட்டம் மற்றும் மறு கட்டளைத் தொகையின் மூலம் ………………… மட்டம் தீர்மானிக்கப்படும் அதேவேளை, மறு கட்டளை மட்டத்திற்கும் ஆகக் குறைந்த சரக்கிருப்பு மட்டத்திற்கும் இடையிலான வேறுபாடு …………………….. எனப்படும்.

38) அ) முழுச் சந்தையையும் ஒத்த குணாம்சங்களைக் கொண்ட பகுதிகளாகப் பிரிப்பது ………………………….. எனப்படும் அதேவேளை, நிறவனத்திற்கு மிகவும் கவர்ச்சிகரமான மற்றும் இலாபகரமான பகுதி …………………….. என அழைக்கப்படுகின்றது.

ஆ) குறித்தவொரு வேலையினது கடமைகள் மற்றும் பொறுப்புக்களைத் தீர்மானிக்கும் செயன்முறையானது ………………………… எனப்படும் அதேவேளை, வேலை விவரணம் மற்றும் வேலை குறித்துரைத்தல் ஆகியவை …………………………… மூலம் தயாரிக்கப்படுகின்றன.

39) அ) சரக்கிருப்புப் புரள்வு விகிதம் மற்றும் கடன்பட்டோர் புரள்வு விகிதம் ஆகியவை …………………… விகிதங்களாகக் காணப்படும் அதேவேளை, பங்கு வழங்கல் மற்றும் தொகுதிக் கடன்களை வழங்கல் நீங்கலாக வெளிவாரி நேர் நிதி மூலமாக மட்டும் காணப்படுவது ……………………… ஆகும்.

ஆ) மனித வள முகாமையாளரின் வலுக்கள் ………………………… மற்றும் ……………………………….. செயற்படுகின்றன.

40) அ) ஊழியர்களது கூலிகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய பிற நலன்கள் ஆகிய அனைத்தும் ஒன்றுசேர்த்து ……………………… எனக் குறிப்பிடப்படும் அதேவேளை, ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிறுவனமொன்னிலுள்ள ஊழியர்களின் சராசரி எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது ஒரு குறிப்பிட்ட காலத்தில் வெளியேறிய ஊழியர்களின் எண்ணிக்கை …………………………… எனப்படும்.

ஆ) நிறுவனமொன்றில் ஊழியர் ஒருவர் இளைப்பாற்று நன்மைகளுக்கு தகுதியுடையவராக வேண்டுமெனின் குறைந்தது ……….. .. . வருட சேவைக் காலத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அந்நிறுவனம் குறைந்தது ……….. ஊழியர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**<u>41 தொடக்கம் 50</u>** <u>வரையுள்ள வினாக்களுக்குப்</u> **<u>பொருத்தமான விடையைத்</u>** <u>தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.</u>

41) பயன்பாட்டின் நோக்கத்தின் அடிப்படையில், பொருட்களை நுகர்வுப் பொருட்கள் மற்றும் கைத்தொழில் பொருட்கள் என வகைப்படுத்தலாம். கைத்தொழில் பொருட்களின் குணாம்சங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1.---------------------------------------------------------------------
2.----------------------------------------------------------------------
3.---------------------------------------------------------------------
4.---------------------------------------------------------------------

42) சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களை வகைப்படுத்தும்போது வித்தியாசமான நியதிகளைப் பயன்படுத்த முடியும். சிற்றளவு வணிகங்களை வகைப்படுத்துவதற்குப் பயன்படுத்தும் அளவு ரீதியான நியதிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1.---------------------------------------------------------------------
2.----------------------------------------------------------------------
3.----------------------------------------------------------------------
4.----------------------------------------------------------------------

43) முறைசாராத் தொடர்பாடலின் நன்மைகள் **நான்கு** தருக.

1.---------------------------------------------------------------------
2.----------------------------------------------------------------------
3.----------------------------------------------------------------------
4.----------------------------------------------------------------------

44) காப்புறுதிச் சந்தையில் செயற்படும் **நான்கு** பிரதான தரப்பினரைக் குறிப்பிடுக

1.-----------------------------------------------------------------------

2.------------------------------------------------------------------------

3.------------------------------------------------------------------------

4.------------------------------------------------------------------------

45) இலங்கையில் வெளிநாட்டு வியாபாரத்துக்கு நேரடியாக ஆதரவு வழங்கும் அரச நிறுவகங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1.-----------------------------------------------------------------------

2.------------------------------------------------------------------------

3.------------------------------------------------------------------------

4.------------------------------------------------------------------------

46) ஹென்றி மின்ற்ஸ்பேக்கின் வகைப்படுத்தலின் பிரகாரம், முகாமையாளர்களின் பிரதான வகிபாகங்கள் மூன்று வகைகளாகத் தரப்பட்டுள்ளது. தீர்மானமெடுத்தல் வகிபாகத்தின் கீழுள்ள உப வகிபாகங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1.-----------------------------------------------------------------------

2.------------------------------------------------------------------------

3.------------------------------------------------------------------------

4.------------------------------------------------------------------------

47) நாடப்பெறப் பொருட்களின் சிறப்பம்சங்கள் **நான்கு** தருக.

1.-----------------------------------------------------------------------

2.------------------------------------------------------------------------

3.------------------------------------------------------------------------

4.------------------------------------------------------------------------

48) சட்டபூர்வமாக தொழிற்சங்கத்தை உருவாக்குவதற்கு அனுமதிக்கப்படாத **நான்கு** வேலைவாய்ப்புப் பகுதிகளைக் குறிப்பிடுக.

1.----------------------------------------------------------------------

2.----------------------------------------------------------------------

3.----------------------------------------------------------------------

4.----------------------------------------------------------------------

49) வணிகத் திட்டத்தைத் தயாரிக்கும் போது கருத்திற் கொள்ளப்படும் **நான்கு** இலக்குக் குழுக்களைக் குறிப்பிடுக.

1.----------------------------------------------------------------------

2.----------------------------------------------------------------------

3.----------------------------------------------------------------------

4.----------------------------------------------------------------------

50) பின்வரும் சுருக்கமான சொற்பதங்களின் கருத்தைத் தருக

State the meaning of the following terms

1. FTP ------------------------------------------------------------------

2. GB ------------------------------------------------------------------

3. MMS ----------------------------------------------------------------

4. OTP ----------------------------------------------------------------

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2025**
**பயிற்சி வினாப்பத்திரம்**

| வணிகக் கல்வி II | மேலதிக வாசிப்பு நேரம்: - 10 நிமிடங்கள் | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

**வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக**

**அறிவுறுத்தல்கள்:**
**ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக**

## பகுதி 1

**01)**

ஹேசானி என்பவர் பழச் சாகுபடி வணிகத்தில் ஈடுபட்டுள்ளதுடன் இவர் பழச்சாறைத் தயாரித்து போத்தலில் அடைத்து விற்பனை செய்கின்றார். இவர் தனது தயாரிப்புக்களுக்கான கட்டளைகளை இணையத்தின் மூலம் பெற்றுக்கொள்வதுடன் பிரபல்யமான கூரியர் நிறுவனத்தின் மூலம் அவர்களுக்கு தனது தயாரிப்புக்களை விநியோகிக்கின்றார்.

i) அ) மேலுள்ள நிகழ்வின்படி, முறையே உற்பத்தி மட்டத்தின் பிரகாரமும் உற்பத்தித் துறைகளின் பிரகாரமும் காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ஆ) மேலே தரப்பட்ட வணிக நிறுவனத்தின் அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக (02 புள்ளிகள்)

ii) அ) ஹேசானி, தனது வணிகத்தை பாடசாலை நண்பருடன் இணைந்து பங்குடைமை வணிகமொன்றாக நடாத்த உத்தேசிக்கின்றார். இத்தீர்மானத்தின் விளைவாக உருவாகக்கூடிய பிரச்சினைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ஆ) உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற்கு வழங்கப்படும் அரச ஊக்குவிப்புக்கள் **இரண்டினைக்** குறிப்பிடுவதுடன் அவை எவ்வாறு மேலே தரப்பட்ட வணிகத்தில் தாக்கம் செலுத்தும் என்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

iii) அ) நுகர்வோருக்கு முக்கியமானது என்ற வகையில் பழச்சாற்றுப் போத்தல்களின் பொதியின் மீது வழங்கப்படக்கூடிய தகவல்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

ஆ) அரசின் பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வதற்கு ஹேசானியின் வணிகம் பங்களிப்புச் செய்யக்கூடிய வழிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.(02 புள்ளிகள்)

iv) அ) இணையத்தினூடாக மட்டும் கட்டளைகளைப் பெறுவதனால் ஹேசானிக்கு ஏற்படும் அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

ஆ) இவ்வணிகமானது பழங்களை வளர்த்தல் மற்றும் குடிபானங்களை போத்தலில் அடைத்தல் வணிகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டால், எவ்வகையான வணிக இணைப்பு இதில் உள்ளடங்கியுள்ளது? அவ்வணிக இணைப்பின் சிறப்பியல்புகள் **இரண்டினை** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

v) மேலுள்ள வணிகத்தின் அக்கறையுடைய தரப்பினர் **இருவரைக்** குறிப்பிடுவதுடன் இவ்வணிகத்தின் அபிவிருத்திக்கு அவர்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்ய முடியும் என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

**02)**

சமூக நிலைபேறான அபிவிருத்தியில் தனிப்பட்ட ஒவ்வொருவரும் சமூக நீதிக்கு உரித்துடையவர்களாவர்.

i) அ) ) சமூக நிலைபேறான அபிவிருத்திக்கு வணிகம் பங்களிப்புச் செய்யக்கூடிய **நான்கு** வழிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ஆ) நிதி சார்ந்த நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஒழுக்கங்களை வணிகங்கள் எவ்வாறு பின்பற்ற முடியும் என்பதற்கு **நான்கு** உதாரணங்கள் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

ii) வணிகங்களின் உயிர்வாழ் தன்மைக்கு அரசாங்கம் அவசியமாவதுடன் அரசாங்கத்தின் உயிர்வாழ் தன்மைக்கு வணிகங்கள் அவசியமானதாகும்.

அ) வணிகங்களில் எவ்வாறு அரசாங்கம் தலையீடு செய்யமுடியும் என்பதற்கு **நான்கு** வழிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ஆ) பின்வரும் வரி வகைகளுக்கான வரி சேகரிக்கும் நிறுவனங்களைக் குறிப்பிடுக.

i) வருமான வரி
ii) பெறுமதி சேர் வரி (VAT)
iii) இறக்குமதி வரிகள்
iv) இறைவரிக் கட்டணங்கள் (assessment tax) (02 புள்ளிகள்)

iii) அ) நாட்டின் பண வழங்கல் மீது இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஓர் இரவுக் கொள்கை வட்டி வீதத்தின் (overnight policy rate) தாக்கத்தை விளக்குக. (02 புள்ளிகள்)

ஆ) நுகர்வோர் பாதுகாப்பானது எந்தளவுக்கு நுகர்வோருக்கும் வணிகர்களுக்கும் முக்கியமானது என்பதனை தனித்தனியாக **இரண்டு** வழிகளில் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

iv) அ) பின்வரும் வணிகங்களுக்கு எந்த வணிக இணைப்பு உதாரணங்களாக அமையும் என்பதனைக் குறிப்பிடுக.

- தேயிலை விநியோகக் கம்பனியுடன் தேயிலைத் தொழிற்சாலை இணைதல்
- பழச்சாறு உற்பத்திக் கம்பனி ஒன்றுடன் மற்றுமோர் பழச்சாறு உற்பத்திக் கம்பனி இணைதல்
- சப்பாத்து தயாரிக்கும் கம்பனி ஒன்று தோல் உற்பத்தி செய்யும் கம்பனி ஒன்றுடன் இணைதல்
- வாகன விநியோகக் கம்பனியுடன் மரம் வளர்க்கும் கம்பனி ஒன்று இணைதல்

(02 புள்ளிகள்)

ஆ) சிற்றளவு வணிகங்கள் ஏன் வித்திரசமான நியதிகளின்படி வகைப்படுத்தப்படுகின்றன என்பதற்கு **இரண்டு** காரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

v) அ) முயற்சியாண்மையானது சிற்றளவு வணிகங்களுக்கு உதவக்கூடிய வழிகள் **நான்கினை** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ஆ) வணிகர்கள் சிலர் ஏன் இலத்திரனியல் பணத்தினூடாக கொடுக்கல்வாங்கல்களைச் செய்வதற்கு தயக்கம் காட்டுகின்றனர் என்பதற்கு **நான்கு** காரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

**03)**

கசுன், சுனில் மற்றும் நிமால் ஆகியோர் முறையே 3:2:1 என்ற அடிப்படையில் மூலதனத்திற்குப் பங்களிப்பை மேற்கொண்டு பங்குடைமை வணிகமொன்றை ஆரம்பித்தனர். அவர்கள் எழுத்து மூலமான பங்குடைமை உடன்படிக்கை எதுவுமின்றி தமது வணிகத்தைத் தொடர்ந்து நடாத்தினர்.

i) அ) 2024ஆம் ஆண்டில் தேறிய இலாபம் ரூ 60000 எனின், இலாபமானது பங்காளரிடையே எவ்வாறு பகிரப்பட வேண்டும் என்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

ஆ) கசுன் கூடுதலான மூலதனத்தைப் பங்களிப்புச் செய்துள்ளதுடன் வணிகத்துக்கு விசேட சேவையையும் வழங்குகின்றார். இதன் காரணமாக தனக்கு சம்பளம் வழங்குமாறு வலியுறுத்துகின்றார். இங்கு எவ்வாறான அறிவுரையை அவருக்கு நீர் வழங்குவீர். (02 புள்ளிகள்)

ii) அ) இப்பங்குடைமை வணிகமானது வரையறுத்த (தனியார்) கம்பனியாக மாற்றப்படுமாயின் அதன் விசேட சிறப்பியல்புகள் **நான்கினை** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ஆ) இரண்டு வகையான வரையறுத்த பொதுக் கம்பனிகளை உதாரணங்களுடன் குறிப்பிட்டு விளக்குக. (02 புள்ளிகள்)

iii) அ) வரையறுத்த பொதுக் கம்பனிகளுடன் ஒப்பிடுகையில் வரையறுத்த (தனியார்) கம்பனிகளை விரிவாக்குவதற்கான காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ஆ) சனச கூட்டுறவுச் சங்கங்கள் தற்போதும் கிராமப்புறங்களில் கவர்ச்சிகரமானதாகக் காணப்படுகின்றன. அவை ஏன் கிராமப்புறங்களில் பிரசித்தி பெற்றவையாகக் காணப்படுகின்றன என்பதற்கான காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

iv) அ) கூட்டுறவுச் சங்கங்கள் ஏன் தனியார் வணிகங்களுடன் போட்டிபோட முடியாதுள்ளன. தற்போதைய போட்டிச் சூழலின் அடிப்படையில் **நான்கு** காரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

ஆ) அரச திணைக்களங்களின் சிறப்பியல்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

v) அ) வங்கிக் கடனையா அல்லது வங்கி மேலதிகப்பற்றையா பெற்றுக்கொள்வது என்பதில் எது வணிகமொன்றுக்கு மிகவும் அனுகூலமானதாகும். உமது காரணங்களை விளக்குக.

(02 புள்ளிகள்)

ஆ) வங்கி மேலதிகப்பற்று வசதிகளை வழங்குவதில் வணிக வங்கிகள் கூடுதலான அக்கறை செலுத்துவது ஏன்? **நான்கு** காரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

**04)**

திரு பியதிலக்க என்பவர் தனியார் கம்பனி ஒன்றில் இருந்து இளைப்பாறியிருந்தார். இவர் இளைப்பாறியபோது தனது பணிக்கொடையைப் பெற்றிருந்தார். இவர் ரூபா ஐந்து மில்லியனை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்ததுடன் மிகுதித் தொகையை எதிர்காலத்தில் தனது மகனின் கல்விச் செலவுக்காக சேமிப்புச் செய்தார்.

i) அ) திறைசேரி உண்டியல்களுக்கு உரித்தான பணத்தின் வகை யாது? உமது விடைக்கான காரணங்களைத் தருக. (02 புள்ளிகள்)

ஆ) மேலே தரப்பட்ட நிகழ்வின் பிரகாரம் பணத்தின் தொழிற்பாடுகளை விளக்குக.

(02 புள்ளிகள்)

ii) அ) 2024ஆம் ஆண்டின் புதிய மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம் மத்திய வங்கியின் பிரதான நோக்கங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ஆ) பின்வரும் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் பயன்படுத்தப்படக்கூடிய நிதிசார் இடையீட்டாளர் (financial intermediary) ஒருவரைக் குறிப்பிடுக.

1. பங்கு வழங்கலில் விண்ணப்பங்களை வழங்குதல்

2. வணிகக் கடன்களை எடுத்தல்

3.புதிய முயற்சியாளர்களின் மூலதனத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்தல்

4. விற்பனை செய்யப்படாத எதுவாயினும் எந்தவொரு விற்பனை செய்யப்படாத பிணைகளுக்கான கொடுப்பனவு செய்தலும் கொள்வனவு செய்தலும்

(02 புள்ளிகள்)

iii) சாமர என்பவர் காப்புறுதிக்கான விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தபோது, குத்தகை வசதிகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் மோட்டார்வாகனத்திற்கான காப்புறுதிப் பத்திரம் நிராகரிக்கப்பட்டது. எனினும், அவரது ஆயுட் காப்புறுதிக்கான விண்ணப்பப் பத்திரத்தை காப்புறுதிக் கம்பனி ஏற்றுக் கொண்டது.

அ) மோட்டார் வாகனக் காப்புறுதி விண்ணப்பப் பத்திரம் நிராகரிக்கப்பட்டமைக்கும் அவரின் ஆயுட் காப்புறுதிக்கான விண்ணப்பப் பத்திரம் ஏற்றுக் கொண்டமைக்குமான காரணங்களை விளக்குக. (02 புள்ளிகள்)

ஆ) காப்புறுதிக்கும் ஆயுளுறுதிக்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

iv) அ) அகஇணையத்திற்கும் (intranet) உள்ளகத் தொடர்பாடலுக்கும் (intercom) இடையிலான நான்கு வேறுபாடுகள் தருக. (02 புள்ளிகள்)

ஆ) தற்போது பண்டகசாலையிடல் ஒரு இலாபகரமான வணிகமாகும். அவ்வாறான வணிகத்தில் பண்டகசாலைக்கான இடஅமைவிற்காக நீர் கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

v) அ) சர்வதேச வியாபாரத்தின் விரைவான வளர்ச்சிக்கான காரணிகள் **நான்கு** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ஆ) சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் வசதிகளைப் பெறுவதற்கு இலங்கை ஒப்புக்கொண்ட நிபந்தனைகள் காரணமாக உள்ளூர் வணிகர்களால் முகங்கொடுக்கப்படும் சவால்கள் **இரண்டினை** குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

## பகுதி II

**05)**

சாலிய மஹாவத்த ரன்சலு ஆடைத் தொழிற்சாலையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆவார். மனித வளங்கள், நிதி, செயற்பாட்டு மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர்கள் இவருக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள். ஆனால், நிறுவனத்தின் தீர்மானம் எடுத்தல் வலுவானது கீழ் மட்ட முகாமையாளர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் பிரச்சினைகளைத் தீர்க்கும் செயன்முறைக்கு அவர் நேரடியாகப் பங்களிப்புகளைச் செய்வார்.

i) அ) சாலிய பிரதிநிதித்துவப்படுத்தும் முகாமைத்துவ மட்டத்தைக் குறிப்பிடுக.
அம்முகாமைத்துவ மட்டத்தின் **இரண்டு** கருமங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ஆ) கீழ் மட்ட முகாமையாளர்களுக்கு தீர்மானம் எடுத்தல் தொடர்பான வலுவை கையளித்தமைக்கு பிரயோகிக்கக்கூடிய முகாமைத்துவத் தத்துவம் எதுவென விளக்குக. (02 புள்ளிகள்)

ii) அ) பிரச்சினைகளைத் தீர்க்கும்போது, சாலிய ஏனையோரிடமிருந்து அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்கிறார். சாலியவினால் பின்பற்றப்படும் தலைமைத்துவப் பாங்கு எது?
(02 புள்ளிகள்)

ஆ )தீர்மானம் எடுத்தல் செயன்முறை தொடர்பாக பிரச்சினை என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

iii) அ) கட்டுப்பாட்டு விசாலம் என்ற எண்ணக்கருவைச் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

ஆ) பல்வேறு நிறுவனங்களிலும் மெய்நிகர் நிறுவனக் கட்டமைப்பு (Virtual Organization Structure) பரந்தளவில் பயன்படுத்தப்படுகிறது. மெய்நிகர் நிறுவனக் கட்டமைப்பின் பிரதான குணாம்சங்கள் **இரண்டு** தருக. (02 புள்ளிகள்)

iv) அ) நிறுவனங்களுக்கு ஏன் ஆய்வு அபிவிருத்தித் திணைக்களம் தேவையானது என்பதற்கான **இரண்டு** காரணங்களை விளக்குக. (02 புள்ளிகள்)

ஆ) செயற்பாட்டு முகாமைத்துவ செயன்முறையை மேலும் வினைத்திறனாக உருவாக்கத்தக்க புதிய உற்பத்தி முறைகள் **இரண்டினை** சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

v) பாதணிகளை உற்பத்தி செய்யும் நி'றுவனமொன்றின் உள்ளீடுகள், வெளியீடுகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| மூலப்பொருட்கள் (அலகுகளில்) | 6000 |

| | |
|---|---|
| ஊழிய மணித்தியாலங்கள் | 2000 |
| இயந்திர மணித்தியாலங்கள் | 4000 |
| வெளியீடுகள் | 1 8000 |

மேலே தரப்பட்ட தகவல்களில் இருந்து பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ) மூலப்பொருள் உற்பத்தித்திறன்

ஆ) ஊழிய உற்பத்தித்திறன்

இ) இயந்திர உற்பத்தித்திறன்

ஈ) மொத்த உற்பத்தித்திறன் (04 புள்ளிகள்)

**06)**

காலிங்க ஜெயவர்த்தன, சொக்லட் உற்பத்தி செய்யும் கம்பனி ஒன்றில் சந்தைப்படுத்தல் முகாமையாளராகப் பணி புரிகின்றார். கம்பனியுடன் தொடர்புடைய தரப்பினருடன் நீண்ட கால உறவைக் கட்டியெழுப்புவதன் மூலம் சந்தைப்படுத்தல் இலக்குகளை அடைந்து கொள்ள முடியுமென காலிங்க நம்பிக்கை கொண்டுள்ளார். எனினும், உற்பத்திப்பொருளானது சிறந்த தரத்தையும் செயற்றிறனையும் கொண்டிருந்தால் சந்தைப்படுத்தல் இலக்குகளை அடைந்து கொள்ள முடியுமென கம்பனியின் செயற்பாட்டு முகாமையாளரான விமங்க நம்பிக்கை கொண்டுள்ளார்.

i) அ) காலிங்க மற்றும் விமங்க ஆகியோரின் எண்ணத்தின் அடிப்படையில் இரண்டு சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ஆ) சொக்லட் மேலுறையின் மீது உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்கள் தொடர்பில் சந்தைப்படுத்துவோருக்கு ஒழுக்கப் பொறுப்புகளில் இருந்து சில விதிவிலக்குகள் வழங்கப்பட்டுள்ளதற்கு **இரண்டு** உதாரணங்கள் தருக (02 புள்ளிகள்)

ii) அ) சொக்லட் உற்பத்தியை உதாரணமாகக் கொண்டு நிலையான கிரயத்தையும் மாறும் கிரயத்தையும் குறிப்பிட்டு விளக்குக. (02 புள்ளிகள்)

ஆ) சொக்லட் உற்பத்திச் செயன்முறையில் தரக் கட்டுப்பாட்டிற்குப் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான முறைகள் **இரண்டினை** விளக்குக. (02 புள்ளிகள்)

iii) அ) இலத்திரனியல் சந்தைப்படுத்தலில் (E- marketing) சந்தைப்படுத்துவோர் முகங் கொடுக்கும் **நான்கு** சவால்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ஆ) சொக்லட் உற்பத்தியில் பசுமைச் சந்தைப்படுத்தலை (green marketing) பயன்படுத்த முடியுமா என்பதற்கு **இரண்டு** விடயங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

iv) அ) சந்தைப்படுத்தலின் பிரதான மேம்படுத்தல் கருவிகளுக்கிடையே நிகழ்ச்சி மற்றும் அனுபவங்கள் ஆகியவற்றின் குணாம்சங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக (02 புள்ளிகள்)

ஆ) நுகர்வுப் பொருட்கள் மற்றும் கைத்தொழிற் பொருட்களின் விநியோக முறைகளுக்கிடையிலான **இரண்டு** வேறுபாடுகள் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

v) அ) சிறந்த பண்டக்குறியின் மூலம் நுகர்வோருக்கும் வணிகருக்கும் கிடைக்கும் நன்மைகள் **இரண்டு** தருக (02 புள்ளிகள்)

ஆ) குடும்பப் பண்டக்குறியையும் தனிப்பட்ட பண்டக்குறியையும் உதாரணங்களுடன் விளக்குக (02 புள்ளிகள்)

**07)**

ஒவ்வொரு வணிகத்தினதும் எதிர்கால வாழும்தன்மையானது நிதி முகாமைத்துவத்தின் வெற்றியின் மீது தங்கியுள்ளது.

i) அ) வணிகத்தில் நிதி என்பதனால் கருதப்படுவது யாது விளக்குக. (02 புள்ளிகள்)

ஆ) பணத்திற்கும் நிதிக்கும் இடையிலான **இரண்டு** வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

ii) அ) ஒதுக்க மூலதனமாக்கல் எவ்வாறு சந்தை மூலதனமாக்கலில் இருந்து வேறுபடுகின்றது (02 புள்ளிகள்)

ஆ) பங்குச் சந்தைக் குறியீடுகளின் முக்கியத்துவங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

iii) அ) அறிமுகப்படுத்தல் நிகழ்ச்சியின் மூலம் நிறுவனமும் ஊழியரும் அடைந்து கொள்ளும் நன்மைகள் **இரண்டு** வீதம் தருக (02 புள்ளிகள்)

ஆ) ஊழியர் செயற்றிறன் மதிப்பீட்டின் பிரகாரம் எதிர்பார்த்த செயற்றிறனை அடைந்து கொள்ளாத ஊழியருக்கு நிறுவனம் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் **இரண்டு** தருக. (02 புள்ளிகள்)

iv) அ) நியமனக் கடிதம் ஒன்றில் கட்டாயம் உள்ளடக்கப்பட வேண்டிய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ஆ) ஒழுக்காற்று முகாமைத்துவத்திற்குப் பயன்படுத்தக்கூடியதாக ஹொட் ஸ்ரவ் சட்டத்தின் (Hot stove law) மூலம் வலியுறுத்தப்படும் **நான்கு** ஒழுக்காற்று விதிகளைக் குறிப்பிடுக (02 புள்ளிகள்)

v) சிறந்த ஊழியர் உறவை பேணும்போது அது பல்வேறு தரப்பினருக்கும் பல்வேறு நன்மைகளைக் கொண்டு வரும்.

அ) சிறந்த ஊழியர் உறவை பேணுவதன் மூலம் நிறுவனம் ஒன்று பெற்றுக்கொள்ளும் **நான்கு** நன்மைகளை விளக்குக. (02 புள்ளிகள்)

ஆ) கூட்டு உடன்படிக்கையை வரைவிலக்கணப்படுத்துவதுடன் கூட்டு உடன்படிக்கையை உருவாக்குவதன் **இரண்டு** நோக்கங்களை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**08)**

i) அ) வாடிக்கையாளர் சேவைகளுக்காக செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தக்கூடிய **இரண்டு** வழிகளைக் குறிப்பிக. (02 புள்ளிகள்)

ஆ) வணிகத்தில் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவதனால் முகங்கொடுக்கும் **இரண்டு** சவால்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii)அ) அறிவு மட்டத் தகவல் முறைமையைக் குறிப்பிட்டு விளக்குக. (02 புள்ளிகள்)

ஆ) சிற்றளவு வணிகர் ஒருவர் தனது வணிகத்தை மேம்படுத்த பயன்படுத்தக்கூடிய இலத்திரனியல் மேம்படுத்தல் முறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக (02 புள்ளிகள்)

iii) அ) முகாமைத்துவக் கருமங்களுக்கு அமைவாக வகைப்படுத்தக்கூடிய தகவல் முறைமைகளின் **இரண்டு** வழிகனைக் குறிப்பிடுக (02 புள்ளிகள்)

ஆ) குறித்தவொரு வணிகமொன்றில் நாளாந்தம் நிறைவேற்ற வேண்டிய பணிகள் வருமாறு

1. ஊழியர்களின் தினசரி வரவைப் பதிவு செய்தல்

2. வணிகத்தில் கற்கைத் தொகுதியை (module) உருவாக்குதல்

3. கம்பனியின் முதலீட்டை மதிப்பிடுதல்

4. விற்பனைகள் மற்றும் கடன்கள் பற்றிய தகவல்களை அறிக்கையிடுதல்

இவற்றின் பயன்பாட்டிற்கு அமைவாக மேலே தரப்பட்ட பணிகளுடன் தொடர்புடைய தகவல் முறைமைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

iv) அ) வணிகம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ள நண்பர் ஒருவருக்கு வணிகக் கல்வியைக் கற்கும் ஒரு மாணவனாக வணிகத் திட்டத்தின் முக்கியத்துவத்தை எவ்வாறு விளக்குவீர்? (02 புள்ளிகள்)

ஆ) இயங்கிக் கொண்டிருக்கும் வணிகமொன்று வணிகத் திட்டத்தினைத் தயாரிக்க வேண்டிய சூழ்நிலைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

v) அ) வணிகமொன்றிற்கு மனித வளத் திட்டமிடல் ஏன் தேவையானது. விளக்குக. (02 புள்ளிகள்)

ஆ) வணிகத் திட்டமொன்றின் நிறைவேற்றுச் சுருக்கம் மிகவும் முக்கியமானதாகும். நிறைவேற்றுச் சுருக்கத்தில் உள்ளடங்கியுள்ள **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය - 2025 උත්තර පත්‍රය

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2025

**General Certificate of Education (Adv. Level) Examination - 2025**

பயிற்சி வினாப் பத்திரம் - **Practice Question Paper**

விடைப் பத்திரம் - **Answer Sheet**

ව්‍යාපාර අධ්‍යයනය I

**வணிகக் கல்வி 1**

**Business Studies I**

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|---|---|
| 01 | 1 | 11 | 1 | 21 | 4 |
| 02 | 3 | 12 | 5 | 22 | 5 |
| 03 | 4 | 13 | 4 | 23 | 4 |
| 04 | 2 | 14 | 3 | 24 | 2 |
| 05 | 5 | 15 | 1 | 25 | 3 |
| 06 | 2 | 16 | 3 | 26 | 1 |
| 07 | 4 | 17 | 4 | 27 | 4 |
| 08 | 5 | 18 | 5 | 28 | 1 |
| 09 | 1 | 19 | 4 | 29 | 4 |
| 10 | 3 | 20 | 2 | 30 | 3 |

31) அ) வணிகம், வர்த்தகம்

ஆ) அக (உள்ளக), மூடிய

32) அ) தலைகீழான, பாதகமான

ஆ) அக (உள்ளக), புற (வெளியக)

33) அ) பங்காளர்கள், அங்கத்தவர்கள்

ஆ) பொது, விசேட

34) அ) காவியின், தொழிநுட்ப

ஆ) இலங்கை மத்திய வங்கி, பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு

35) அ) உற்பத்தித்திறன், வினைத்திறன்

ஆ) தொழிநுணுக்க, மானிட

36) அ) பிரச்சினை, தீர்மானம்

ஆ) இலட்சியநோக்கு, நோக்கங்கள்

37) அ) தொகுதி, பாய்ச்சல்

ஆ) ஆகக்கூடிய, விநியோகக் காலம் (முதன்மைக்காலம்)

38) அ) சந்தைத் துண்டமாக்கல், இலக்குச் சந்தை

ஆ) உருவாக்கல் (creating), வேலைப் பகுப்பாய்வு

39) அ) செயற்பாட்டு, வணிகத் தாள்கள்

ஆ) கிடையாகவும், நிலைக்குத்தாகவும்

40) அ) சம்பளங்களாகக், ஊழியர் புரள்வு

ஆ) 5, 15

41)

- பெரும்பாலும் வணிகர்களால் கொள்வனவு செய்யப்படும்.
- ஒப்பீட்டளவில் விலை அதிகம்
- நீண்ட கால வாழ்வுத்தன்மை
- ஏனைய பொருட்களை உற்பத்தி செய்யக் கொள்வனவு செய்யப்படும். ( derived demand)

42)

- வணிக நிறுவனத்தின் வகை
- தொழிநுட்பம்
- சந்தையின் தன்மை
- நெகிழ்வுத்தன்மை

43)

- மறைக்கப்பட்ட தகவல்களை வெளிப்படுத்த முடியும்
- தரப்பினருக்கிடையே தகவல் மற்றும் அனுபவம் பரிமாற்றப்படும்
- முறைசார் தொடர்பாடலுக்கு எளிதானது
- தகவலை மிக விரைவாகப் பரப்ப முடியும்
- பிரச்சினைகளைத் தந்திரோபாய ரீதியாக எதிர்கொள்ள உதவியாக இருக்கும்

44)

- காப்புறுதிக் கம்பனிகள்
- காப்புறுதி முகவர்கள்
- காப்புறுதித் தரகர்கள்
- இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
- காப்புறுதி அளிப்போர்
- மீள் காப்புறுதி செய்வோர்
- வரையறுத்த இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

45)

- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
- இலங்கை வர்த்தகத் திணைக்களம்
- இலங்கைச் சுங்கத் திணைக்களம்
- இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
- இலங்கைத் துறைமுக அதிகாரசபை

46)

- முயற்சியாளர்
- வள ஒதுக்கீட்டாளர்
- குழப்பங்களைக் கையாள்பவர்
- சமரசம் செய்பவர்

47)

- கொள்வனவு செய்யும் எண்ணம் உருவாவதில்லை
- சந்தையில் காணப்படுகின்றபோதும் தெரிவதில்லை
- கூடுதலான மேம்படுத்தல் முயற்சி தேவைப்படும்
- ஒப்பீட்டளவில் விற்பனை மேம்படுத்தலில் உயர்வான கிரயம்

48)

- காவல் துறை (police)
- நீதித் துறை அலுவலர்கள் (Judicial officers)
- முப்படையினர் (Tri-forces)
- சிறைச்சாலை அலுவலர்கள் (Prison officers)
- குடிசார் பாதுகாப்புப் படை (Civil defense force)

49)

- நிதி நிறுவகங்கள்
- முயற்சி முதலீட்டாளர்கள் (Venture investors)
- ஊழியர்கள்
- நிறுவனம்சார் சேவை வழங்குனர்கள் (Institutional providing services)

50)

- FTP- கோவை மாற்றல் நடப்பொழுங்கு (file transfer protocol)
- GB- கிகா பைற் (giga bites)
- MMS- பல்லூடக தகவல் சேவை (Multimedia message service)
- OTP- ஒரு தடவைக்கான கடவுச்சொல் (one time password)

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය - 2025 උත්තර පත්‍රය

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2025**

**General Certificate of Education (Adv. Level) Examination 2025**

**பயிற்சி வினாப் பத்திரம் - Practice Question Paper**

**விடைப் பத்திரம் - Answer Sheet**

ව්‍යාපාර අධ්‍යයනය **11**

**Business Studies 11**

**வணிகக் கல்வி II**

**01)**

**I (அ) உற்பத்தி மட்டத்தின் பிரகாரம்** - முதனிலை, இரண்டாம்நிலை, மூன்றாம்நிலை

(1/2 × 2 = 01 புள்ளி)

**உற்பத்தி துறைகளின் பிரகாரம்** -விவசாயம், கைத்தொழில், சேவைகள்

(1/2 × 2 = 01புள்ளி)

**(ஆ)**

- வணிகத்தை ஆரம்பிப்பது சுலபம்
- சுயாதீனமாக தீர்மானங்களை எடுக்கக்கூடியதாக இருத்தல்
- தனிப்பட்ட அர்ப்பணிப்பின் மீது வணிக இரகசியங்கள் தங்கியிருத்தல்
- ஒப்பீட்டளவில் குறைந்தளவான சட்டத்தின் தாக்கம்
- தனிப்பட்ட ரீதியில் இலாபங்களை அனுபவிக்கக்கூடியதாக இருத்தல்
- வணிக இரகசியங்கள் மீண்டும் மீண்டும் உள்வாரியாகக் காணப்படுதல்

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

ii) (அ)

- தீர்மானங்களை எடுப்பதில் பிரச்சினைகள் காணப்படும்
- இலாபங்களைப் பகிர்வு செய்ய வேண்டியிருத்தல்
- வணிக இரகசியங்கள் வெளியாகலாம்
- ஒப்பீட்டளவில் உயர்ந்தளவு சட்டத்தின் செல்வாக்கு
- பங்காளரிடையே உடன்பாடின்மைகள் காணப்படுதல் (1/2 × 4 = 02 புள்ளிகள்)

(ஆ)

1. **வரி விடுதலை** - இதனால் குறைந்தளவு உற்பத்திக் கிரயம், கேள்வி மற்றும் இலாபத்தன்மை அதிகரித்தல்
2. **நிதி வசதிகள்** - குறைந்த வட்டிக் கடன்களின் மூலம் வணிகத்தை விரிவுபடுத்த முடிதலும் நிதிக் கிரயங்களைக் குறைக்க முடிதலும்
3. **சந்தை வசதிகள்** - உற்பத்திப்பொருட்களை சந்தையில் விற்க முடிதலும் அரச அங்கீகாரமும் கிடைத்தல்
4. **அரச ஆலோசனைகளும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும்**
5. **நிறுவக ரீதியான சேவைகள்** - தர முகாமைத்துவத்தில் பயிற்சி, ஊழியரின் வினைத்திறனை அதிகரித்தல், நுகர்வோர் நம்பிக்கை அதிகரித்தல்

(குறிப்பிட - 1/2 × 2 = 01 புள்ளி, விளக்க - 1/2 × 2 = 01 புள்ளி)

iii) அ)

1. **விலை** – கொள்வனவு செய்தலைத் தீர்மானிக்கவும், விலைகளை ஒப்பீடு செய்யவும்
2. **அளவு** – கொள்வனவு செய்வதற்கு வேண்டிய போதுமான அளவு காணப்படுகின்றதா என்பதைத் தீர்மானிக்க
3. **உள்ளடங்கியுள்ள பொருட்கள்** - சீனி, கொழுப்பு, உப்பு … குறித்த பொருள் உடல்நலத்திற்கு பொருத்தமானதா என்பதை அறிய
4. **திகதி** – உற்பத்தி செய்த மற்றும் காலவதியாகும் திகதிகளை அறிய, ஆகக்கூடிய பயன்படுத்தக்கூடிய காலத்தை அறிந்து கொள்ள
5. **களஞ்சியப்படுத்தல்** - எவ்வாறு களஞ்சியப்படுத்த வேண்டும் என்பதனை அறிய
6. **அறிவுறுத்தல்கள்** - எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதனை அறிந்துகொள்ள
7. **உற்பத்தியாளர்கள் பற்றிய தகவல்கள்** (விளக்கத்துடன்1x2=02 புள்ளிகள்)

ஆ).

- வேலைவாய்ப்புக்களை உருவாக்க
- தேசிய உற்பத்தியை அதிகரிக்க
- உள்ளூர் வளங்களைப் பயன்படுத்த
- அரச வரி வருமானத்தை அதிகரிக்க
- பிராந்திய அபிவிருத்திக்கு (1/2 × 4 = 02 புள்ளிகள்)

iv) அ)

**அனுகூலங்கள்**

1. காகிதாதிகள் கிரயம் குறைவடைதல்
2. வழுக்கள் குறைவடையும்

3. கொடுக்கல்வாங்கல்களை மிக விரைவாகச் செய்யலாம்

4. தேவையான ஊழியர் எண்ணிக்கை குறைவடையும் (1/2 × 2 = 01புள்ளி)

**பிரதிகூலங்கள்**

1. ஆரம்பக் கிரயம் உயர்வாகக் காணப்படுதல்

2. தொழிநுட்பத் தவறுகள் ஏற்படுதல்

3. இணையத் தொழிநுட்பத்தை இற்றைப்படுத்தல் உள்ளடங்கலாக மேலதிக கிரயங்கள் ஏற்படுதல்

4. ஒவ்வொரு வாடிக்கையாளருடனும் தொடர்பை ஏற்படுத்த இயலாது

5. ஊழியர் பயிற்சிப் பிரச்சினைகள் உருவாகும்

6. பயிற்றப்பட்ட வேலையாட்களின் பற்றாக்குறை (1/2 × 2 = 01புள்ளி)

**ஆ)** கிடையான இணைப்பு (01புள்ளி)

**சிறப்பியல்புகள்**

1. தனியுரிமையை கட்டியெழுப்ப முடிதல்
2. போட்டி குறைவடைதல்
3. வணிகம் விரிவுபடுத்தப்படுதல்
4. சந்தைப் பங்கு அதிகரித்தல் (1/2 × 2 = 01புள்ளி)

**v) உடைமையாளர்**

1. வணிகத்திற்குத் தேவையான மூலதனத்தை வழங்குவதன் மூலம்
2. வணிகத்தைக் கண்காணிப்பதன் மூலம்
3. வணிகத்தை முகாமை செய்வதன் மூலம்
4. ஊழியர்களுக்கு அவசியமான அறிவுறுத்தல்களை வழங்குவதன் மூலம்

**ஊழியர்கள்**

1. வழங்கப்பட்ட பணியை ஒழுங்காக நிறைவேற்றுவதன் மூலம்
2. நிறுவன முகாமைக்கு விசுவாசமாக இருப்பதன் மூலம்
3. வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துவதன் மூலம்

**வாடிக்கையாளர்கள்.**

1. நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதன் மூலம்
2. பொருட்களைக் கொள்வனவு செய்வதன் மூலம்
3. வணிகம் தொடர்ந்து காணப்படுவதனை உறுதிப்படுத்துவதன் மூலம்

**வழங்குனர்கள்**

1. உரிய நேரத்தில் பொருட்களை வழங்குதல்

2. உடன்படிக்கையின் பிரகாரம் சரியாகச் செயற்படுதல்
3. தரமான ஏற்பாட்டியல் சேவைகளை வழங்குதல்
4. சரியான நேரத்தில் அவசியமான பொருட்களை வழங்குதல்

( குறிப்பிட1 x 2 = 02 புள்ளிகள், விளக்க 02 புள்ளிகள்)

**02)**

**i)** **அ)** - மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுதல்

- மக்களுக்கு சம சந்தர்ப்பங்களை வழங்குதல்
- சமூக ஒருங்கிணைப்பு
- மனித மூலதனத்தைப் பராமரித்தல்
- கலாசாரம், பாரம்பரியம் மற்றும் வழக்கங்களைப் பாதுகாத்தல்
- வறுமையைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தல்

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

ஆ) - நியமங்களுக்கு அமைவாக கணக்கீட்டு முறைமைகளைச் சரியாகப் பேணுதல்

- வழிகாட்டியில் குறிப்பிட்டவாறு வரிகளைச் சரியாகச் செலுத்துதல்
- இரகசியத்தன்மையைப் பாதுகாத்தல்
- விசுவாசப் பிணக்குகளைக் குறைப்பதற்கு
- அக்கறையுடைய தரப்பினரின் ஆதரவை வெல்வதற்கு
- தொழில்வாண்மை அடிப்படையில் நிதி சார்ந்த விவகாரங்களைக் கையாளுதல்

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

**ii).** அ)

- ○ வாடிக்கையாளராக
- ○ வழங்குனராக
- ○ போட்டியாளராக
- ○ வசதியளிப்போராக
- ○ ஒழுங்குபடுத்துனராக
- ○ கொள்கை வகுப்பாளராக
- ○ சட்டங்களையும் பிரமாணங்களையும் இயற்றுபவராக
- ○ வரி செலுத்துபவராக (1/2 × 4 = 02 புள்ளிகள்)

ஆ) **வருமான வரி** - உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

**பெறுமதி சேர் வரி** - உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

**இறக்குமதி வரிகள்** - இலங்கைச் சுங்கம்

**இறைவரிக் கட்டணங்கள்** - உள்ளூராட்சி சபைகள் (1/2 × 4 = 02 புள்ளிகள்)

**iii) அ)** ஓர் இரவுக் கொள்கை வட்டி வீதம் (OPR) அதிகரிக்கும்போது, பிணைகளைக் கொள்வனவு செய்வதனூடாக அரசினால் பொது மக்களின் பணச் சுழற்சியானது கொண்டு வரப்படும்.

ஓர் இரவுக் கொள்கை வட்டி வீதம் (OPR) குறையும்போது வணிக வங்கிகளிடம் இருந்து கடன் வாங்குதல் அதிகரிப்பதுடன் பணச் சுழற்சியானது அதிகரிக்கும்.

(விளக்க 02 புள்ளிகள்)

ஆ) நுகர்வோருக்கு

1. பணத்திற்கான பெறுமதியை பெற்றுக்கொள்வதன் மூலமான வாடிக்கையாளர் திருப்தி
2. தவறான வியாபார நடவடிக்கைகளிலிருந்தான பாதுகாப்பு
3. நுகர்வோரின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
4. நுகர்வோருக்கான சிறந்த சூழலை உருவாக்குதல் (1/2 × 2 = 01புள்ளி)

வணிகருக்கு

1. உற்பத்தியானது நியமங்களின் கீழ் நடைபெறுவதனால் வீண்விரயங்கள் குறைவடைதல்
2. விற்பனைப் புரள்வு அதிகரித்தல்
3. தரமான பொருட்களின் காரணமாக நுகர்வோரின் தன்னம்பிக்கை உறுதிப்படுத்தப்படுதல்
4. மதிப்பு அபிவிருத்தியடைதல் (1/2 × 2 = 01புள்ளி)

iv) அ)

- **தேயிலை விநியோகக் கம்பனியுடன் தேயிலைத் தொழிற்சாலை இணைதல்** - நிலைக்குத்தான முன்னோக்கிய இணைப்பு
- **பழச்சாறு உற்பத்திக் கம்பனி ஒன்றுடன் மற்றுமோர் பழச்சாறு உற்பத்திக் கம்பனி இணைதல்** - கிடையான இணைப்பு
- **சப்பாத்து தயாரிக்கும் கம்பனி ஒன்று தோல் உற்பத்தி செய்யும் கம்பனி ஒன்றுடன் இணைதல்** - நிலைக்குத்தான பின்னோக்கிய இணைப்பு
- **வாகன விநியோகக் கம்பனியுடன் மரம் வளர்க்கும் கம்பனி ஒன்று இணைதல்** - பல்கூட்டு நிறுவன இணைப்பு (conglomerate combination)

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

ஆ)

1. பல்வேறு வகையான ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கைகள்
2. பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கான துறைகளை இலகுவில் இனங்காண்பதற்கு
3. ஆவணங்களையும் அறிக்கைகளையும் தயாரிப்பதற்கு
4. புதியனவற்றை தேடும் நடவடிக்கைகளுக்கான தகவல்களை வழங்குவதற்கு
5. மீள்நிதியிடல் வசதிகளை வழங்குவதற்கு (1/2 × 4 = 02 புள்ளிகள்)

v) அ)

1. இடரை முகாமை செய்வதற்கான ஆற்றலூடாக இடரைக் குறைப்பதற்கு
2. முயற்சியாளரது அர்ப்பணிப்பின் மீதான அடிப்படையில் வணிகத்தின் வெற்றிக்கு
3. முயற்சியாளரது திடமான நோக்கத்தினூடாக சிற்றளவு வணிகம் வெற்றியடைய முடியும்
4. முயற்சியாளரது ஆக்கத்திறனின் மீதான அடிப்படையில் வணிகத்தின் உயிர் வாழும்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு
5. பாரியளவு வணிகத்தால் ஆரம்பிக்க முடியாததை வணிக முயற்சியாக முன்னோக்கி வருவதற்கு (1/2 × 4 = 02 புள்ளிகள்)

ஆ)

1. நலன்களைப் புரிந்துகொள்வதில் உள்ள பற்றாக்குறை
2. ஆரம்பக் கிரயத்தைத் தாங்கிக்கொள்வதற்கான விருப்பமின்மை
3. தொழிநுட்பம் பற்றிய அறிவுப் பற்றாக்குறை
4. பாரம்பரியமான மனப்பாங்கு நோக்கியதான போக்கு
5. சாத்தியமான மோசடி நடவடிக்கைகள் மீதான சந்தேகம்
6. அதிகப்படியான பராமரிப்புக் கிரயம் (1/2 × 4 = 02 புள்ளிகள்)

**03) i) அ)** பங்காளரிடையே இலாபமானது சமமாகப் பகிரப்படல் வேண்டும்.

1890 ஆம் ஆண்டு பங்குடைமைச் சட்டத்தின் 24ஆம் பிரிவின் பிரகாரம் பங்காளரிடையே எழுத்து வடிவிலான பங்குடைமை உடன்படிக்கை காணப்படாதவிடத்து இலாபமானது சமமாகப் பகிரப்படல் வேண்டும். (02 புள்ளிகள்)

**ஆ)** இங்கு 1890 ஆம் ஆண்டு பங்குடைமைச் சட்டத்தின் 24ஆம் பிரிவு பொருத்தமானதென்பதனால் 24ஆம் பிரிவின் பிரகாரம் பங்காளர்கள் சம்பளம் பெற முடியாது. (02 புள்ளிகள்)

**II. அ)**

- சட்ட ஆளுமையைக் கொண்டிருத்தல்
- வரையறுத்த நட்டப்பொறுப்பு
- தொடர்ச்சியான வாழ்தன்மை
- பதிவு செய்தல் கட்டாயமானது
- பணிப்பாளர்களால் கட்டுப்படுத்தப்படுதல் (1/2 × 4 = 02 புள்ளிகள்)

**ஆ)** பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகள், பட்டியற்படுத்தப்படாத கம்பனிகள்

உதாரணங்கள் கட்டாயமானதாகும்.

(குறிப்பிட1/2 × 2 = 01 புள்ளி, உதாரணங்கள் 01 புள்ளி)

**III.** **அ)**

1. கம்பனியின் உடைமையை நெருக்கமான நண்பர்களிடையே மட்டும் பேண முடியும்
2. சிறிய குழுவினரிடையே மட்டும் இலாபத்தை விநியோகிக்க வேண்டியிருக்கும்.
3. பெரும்பாலும் சட்டத் தாக்கம் குறைவு
4. இரகசியத் தகவல்கள் சிறிய குழுவினரிடையே மட்டும் பேணப்படும்.
5. குறைவான அங்கத்தவர்களின் கட்டுப்படுத்தலைக் கொண்டிருக்கும்.

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

ஆ)

- சாதாரண கிராமப்புற மக்களுடன் நெருக்கமாக இருத்தல்
- இலகுவான வங்கிக் கொடுக்கல்வாங்கல்கள்
- கடன் பெறும்போது பிணை நிபந்தனைகள் மிகவும் இலகுவாயிருத்தல்
- வித்தியாசமான துறைகளில் மக்களுக்கு விசேட ஆதரவு வழங்குதல்
- அங்கத்தவர்களுக்கான ஊக்குவிப்புக்கள் (1/2 × 4 = 02 புள்ளிகள்)

**iv)** **அ)**

- நாளாந்தம் வரையறுத்த நேரமே திறக்கப்படுதல்
- கடன் விற்பனைகள் அனுமதிக்கப்படுவதில்லை
- ஊழியர் ஊக்குவிப்பு முறைமைகளின் பற்றாக்குறையும் சேவைகளின் தரத்தின் வீழ்ச்சியும்
- முகாமைக்கு அறிவுத்திறனுடையவர்கள் நியமிக்கப்படுவதில்லை
- கூட்டுறவு நிறுவனங்களின் கவர்ச்சிகரத்தன்மையின் பற்றாக்குறை
- வரையறுக்கப்பட்ட பொருட்களே விற்பனை செய்யப்படுதல்
- கூட்டுறவை நோக்கியதாக நுகர்வோரின் சார்பான மனப்பாங்கின் பற்றாக்குறை
- ஏந்தவொரு மேம்படுத்தல் முறைகளையும் பயன்படுத்துவதில்லை

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

ஆ)

- சட்ட ஆளுமையின்மை
- அரசின் கீழான முழுமையான கட்டுப்பாடு
- இறுக்கமான சட்டங்களும் பிரமாணங்களும்
- ஊழியர்களை நிரந்தர அரச ஊழியர்களாகப் பேணுதல்
- வரவு செலவுத் திட்டத்தின் மூலமான நிதி ஒதுக்கீடு
- தொடர்ச்சியான வாழ்தன்மை
- வரையறுக்கப்படாத நட்டப்பொறுப்பு (1/2 × 4 = 02 புள்ளிகள்)

**v)** அ) வங்கி மேலதிகப்பற்றைப் பெற்றுக்கொள்ளுதல்

**காரணங்கள்**

1. விரைவாகப் பெற்றுக்கொள்ள முடிதல்
2. பிணைகள் தேவையில்லை என்பதுடன் ஆவணப்படுத்தல்கள் அவசியமில்லை
3. தவணைக் கட்டணங்களாகக் கூடச் செலுத்த முடியும்
4. பயன்படுத்தப்பட்ட காலத்திற்கும் பயன்படுத்தப்பட்ட தொகைக்கும் மட்டுமே வட்டிக் கட்டணங்கள் அறவிடப்படும்
5. பயன்படுத்தப்பட்ட திகதியில் இருந்து பயன்படுத்தப்பட்ட தொகைக்கு மட்டுமே வட்டிக் கட்டணங்கள் அறவிடப்படும் (1/2 × 4 = 02 புள்ளிகள்)

ஆ) **காரணங்கள்**

- உயர்வான வட்டியை அறவிட முடியும்
- இலகுவாக மீளப் பெற்றுக் கொள்ளலாம்
- விசுவாசமுடைய வாடிக்கையாளர்கள் வந்து சேருதல்
- அறவிடமுடியாக் கடன்களினால் ஏற்படும் இடர்களைக் குறைக்க முடிதல்

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

**04)** **i)** அ) **திறைசேரி உண்டியல்கள்** - அண்மிய பணம் (01புள்ளி)

- திரவத்தன்மை அதிகம் (01புள்ளி)

ஆ)
- கணக்கீட்டு அலகாகத் திகழ்தல்
- பரிமாற்று ஊடகமாகத் திகழ்தல்
- பெறுமானத் திரட்டாகத் திகழ்தல்

( குறிப்பிட1/2 x 2 = 01 புள்ளி, விளக்க 01 புள்ளி)

**ii)** அ) உள்நாட்டு விலை உறுதித்தன்மையை அடைதலும் பேணுதலும் (02 புள்ளிகள்)

**ஆ)**

1. பங்கு வழங்கலில் விண்ணப்பங்களை வழங்குதல் - **முதலீட்டு முகாமையாளர்கள்**
2. வணிகக் கடன்களை எடுத்தல் - **எல்லை வழங்குனர்கள்**

3. புதிய முயற்சியாளர்களின் மூலதனத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்தல் - **முயற்சி மூலதனக் கம்பனிகள்**

4. விற்பனை செய்யப்படாத எதுவாயினும் எந்தவொரு விற்பனை செய்யப்படாத பிணைகளுக்கான கொடுப்பனவு செய்தலும் கொள்வனவு செய்தலும் - **ஒப்புறுதியளிப்போர்** (1/2 × 4 = 02 புள்ளிகள்)

**iii) அ) காப்புறுதி செய்யத்தக்க உரிமை**

மோட்டார்வாகனத்திற்கான காப்புறுதி செய்யத்தக்க உரிமை குத்தகைக் கம்பனிக்கு உரித்தானதாகும். ஆனால், ஆயுளுக்கான காப்புறுதி செய்யத்தக்க உரிமை சாமரவிற்கு உரித்தானதாகும். (02 புள்ளிகள்)

**ஆ)**

| **காப்புறுதி** | **ஆயுளுறுதி** |
|---|---|
| 1. ஆதனங்களுக்கு | உயிருக்கு |
| 2. வருடாந்தம் புதுப்பித்தல் | நீண்ட காலத்திற்கு பெறலாம் |
| 3. நட்டஈட்டு தத்துவம் பொருந்தும் | நட்டஈட்டு தத்துவம் பொருந்தாது |
| 4. இது ஒரு சேமிப்பல்ல | இது ஒரு சேமிப்பு முறையாகும் |
| 5.உத்தரவாதமாக எடுக்க முடியாது | உத்தரவாதமாக எடுக்கலாம் |
| 6 கைமாற்றம் செய்யலாம் | கைமாற்றம் செய்ய இயலாது |

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

**iv)அ)**

| **உள்ளகத் தொடர்பாடல்** | **அகஇணையம்** |
|---|---|
| அ)குறைவான வீச்சில் பயன்படுத்தப்படும் | பரந்த வீச்சில் பயன்படுத்தப்படும் |
| ஆ) வாய்மொழி மூலமான ஊடகங்கள் மட்டும் பயன்படுத்தப்படும் | பல ஊடகங்கள் பயன்படுத்தப்படும் |
| இ) கம்பி வழியற்றது அல்லது கம்பி வழியுடையது | இணையத்தை அடிப்படையாகக் கொண்டது |

| **உள்ளகத் தொடர்பாடல்** | **அகஇணையம்** |
| --- | --- |
| ஈ) சிக்கலான தொழிநுட்ப அறிவு தேவையில்லை | சாதாரணமான தொழிநுட்ப அறிவு தேவை |

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

**ஆ)**

- கிரயம்
- உட்கட்டமைப்பு வசதிகள்
- களஞ்சியத்திற்கான மூலப்பொருட்களின் தன்மை
- பிரதானமான இணைப்புக்களுக்கான அருகாமை
- களஞ்சியத்தின் அளவு (space)
- பொருட்களுக்கும் ஊழியர்களுக்கும் களஞ்சியத்தில் காணப்படும் பாதுகாப்பு

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

**v)** அ) தகவல் தொழிநுட்பம் அபிவிருத்தியடைகின்றமை

போக்குவரத்து முறைகள் அபிவிருத்தியடைகின்றமை

வங்கி முறைமைகள் அபிவிருத்தியடைகின்றமை

நாடுகளுக்கு இடையிலான தொடர்புகள்

பிராந்திய வளங்கள் புத்துருவாதல் (1/2 × 4 = 02 புள்ளிகள்)

ஆ)

- இறக்குமதிகள் மீது கட்டியெழுப்பப்படும் வணிகங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகள்
- வித்தியாசமான வரிக் கொள்கைகள் காரணமாக உள்ளூர் வளங்கள் மீதான அதிகரித்த வரிச்சுமை
- பரிமாற்றறு வீதங்களின் மாற்றங்கள் காரணமான தாக்கங்கள்
- அரச ஊக்குவிப்புக்கள் குறைவடைதல்
- நிர்வாகக் கட்டுப்பாடுகள் இறுக்கமடைதல் (1/2 × 4 = 02 புள்ளிகள்)

## பகுதி 11

(05) i) அ) உயர் முகாமைத்துவ மட்டம் (01புள்ளி)

**கருமங்கள்**

- நிறுவன இலக்குகளையும் நோக்கங்களையும் உருவாக்குதல்
- தந்திரோபாயங்களையும் கொள்கைகளையும் தீர்மானித்தல்
- நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயன்முறையை முடிவு செய்தல்
- நடுத்தர மட்ட முகாமையாளர்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்தல்

($1/2 \times 2 = 01$ புள்ளி)

ஆ) பன்முகப்படுத்தல் (01புள்ளி)

தீர்மானம் எடுத்தல் வலுவானது உயர் மட்ட முகாமையில் இருந்து கீழ் மட்ட முகாமையாளர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. (விளக்க 01 புள்ளி)

ii) அ) ஜனநாயக தலைமைத்துவப் பாங்கு (01புள்ளி)

தலைமை வகிப்பவர், பணிகளை நிறைவேற்றும்போது கீழ் மட்டத்தில் உள்ளவர்களின் எண்ணங்களைக் கருத்திற்கொண்டு பணிகளை நிறைவேற்றுகின்றார். (விளக்க 01 புள்ளி)

ஆ) தற்போதைய சூழ்நிலைக்கும் விரும்பிய சூழ்நிலைக்கும் இடையிலான இடைவெளியை பிரச்சினை ஒன்றாக விபரிக்கலாம். (02 புள்ளிகள்)

iii) அ) முகாமையாளர் ஒருவருக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்கும் கீழ் மட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை எடுத்துக் காட்டுகிறது. (01புள்ளி)

சாலியவின் கட்டுப்பாட்டு விசாலம் நான்கு ஆகும். (01புள்ளி)

ஆ)

- தொழிநுட்பத்தின் மீதான அடிப்படையில் தொடர்பாடல் வலைப்பின்னல் செயற்பாடு
- மக்கள் குழுக்கள் புவிசார் தூரத்துடன் தொடர்புடையதாக இருத்தல்
- நெகிழ்வுத்தன்மை அதிகமாக இருத்தல்
- ஒப்பீட்டளவில் குறைவான கிரயம் ($1 \times 2 = 02$ புள்ளிகள்)

iv) அ)

- தற்போதைய உற்பத்திப்பொருள் பற்றிய தகவல்களைக் கலந்துரையாடி முன்னேற்றுவதற்கான ஆய்வுகளை மேற்கொள்ள
- உற்பத்திச் செயன்முறையை முன்னேற்றுவதற்கான ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள
- புதிய உற்பத்திப்பொருட்களை திட்டமிடவும் அபிவிருத்தி செய்யவும்
- தரத்தை முன்னேற்ற (1 × 2 = 02 புள்ளிகள்)

**ஆ) கணினி உதவியுடனான வடிவமைப்பு (CAD)**
→ கணினித் தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்திப்பொருளை வடிவமைத்தல்

**கணினி உதவியுடனான உற்பத்தி (CAM)**
→ உற்பத்திச் செயன்முறையில் கணினி நிகழ்ச்சித்திட்டங்களைப் பயன்படுத்துதல்

**கணினி ஒருங்கிணைந்த உற்பத்தி (CIM)**
(CAD + CAM)
→ CAD மற்றும் CAM இணைந்த வகையில்

**கணினி எண்ணிக்கைக் கட்டுப்பாடு (CNC)**

( குறிப்பிட 1/2 x 2 = 01 புள்ளி, விளக்க 01 புள்ளி)

v)

அ) மூலப்பொருள் உற்பத்தித்திறன் 18000 / 6000 = 3 அலகுகள்

ஆ) ஊழிய உற்பத்தித்திறன் 18000 / 2000 = 9 அலகுகள்

இ) இயந்திர உற்பத்தித்திறன் 18000 / 4000 = 4.5 அலகுகள்

ஈ) மொத்த உற்பத்தித்திறன் 18000 / 12000 = 1.5 அலகுகள்

(6000 + 2000 + 4000)

((1 × 4 = 04 புள்ளிகள்)

**06)**

**i)** அ) காலிங்க - முழுமைப்படைப்புச் சந்தைப்படுத்தல் எண்ணக்கரு அல்லது உறவுமுறைச் சந்தைப்படுத்தல் எண்ணக்கரு

விமங்க – உற்பத்திப்பொருள் எண்ணக்கரு (1 × 2 = 02 புள்ளிகள்)

ஆ)

- **விலை குறிப்பிட வேண்டியதில்லை** – விலையை ஒப்பிடுவதற்கும் செலுத்த வேண்டிய தொகையைத் தீர்மானிப்பதற்கும்
- **உள்ளீடுகளைக் குறிப்பிட வேண்டியதில்லை** – சுகாதாரத் தாக்கங்களைப் பரிசோதிக்க
- **அளவைக் குறிப்பிட வேண்டியதில்லை** – தேவைக்கான போதுமான அளவை உறுதிப்படுத்த
- **காலவதியாகும் திகதியைக் குறிப்பிட வேண்டியதில்லை** – பயன்படுத்தும் காலப்பகுதியைத் தெரிந்துகொள்ள
- **உற்பத்தித் திகதியைக் குறிப்பிட வேண்டியதில்லை** – உற்பத்திப்பொருளின் புதியதன்மையை தெரிந்துகொள்ள (1 × 2 = 02 புள்ளிகள்)

**ii)** **அ)**

- நிலையான கிரயம் - நிலம் / கட்டடம் / இயந்திரங்கள் / தொழிற்சாலை வாடகை
- மாறும் கிரயம் - கூலிகள் / மூலப்பொருட் கிரயம் / பொதிகட்டல் கிரயம்

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

**ஆ)**

- தர வட்டம் / தர உறுதிப்பாடு / மொத்தத் தர முகாமைத்துவம் /பூச்சிய வழுக்கள் / தர நியமங்கள் / புள்ளிவிபரச் செயன்முறைக் கட்டுப்பாடு

( குறிப்பிட 01 புள்ளி, விளக்க 01 புள்ளி)

**iii)** **அ)**

- உயர்வான ஆரம்பக் கிரயம்
- பயிற்சி பெற்ற ஊழியர்களுக்கான தேவை
- போட்டி
- வாடிக்கையாளரின் நம்பிக்கை பற்றிய சந்தேகங்கள்
- வழங்கலைத் தீர்மானிக்கக்கூடிய ஆற்றலின்மை
- தொழிநுட்ப அறிவு தேவைப்படுதல் (1/2 × 4 = 02 புள்ளிகள்)

**ஆ)**

- சூழலுக்கு நேயமான கட்டட வடிவமைப்பு
- சூழலுக்கு நேயமான இயந்திரங்கள்
- கழிவுப்பொருள் முகாமைத்துவம்

- சூழலுக்கு நேயமான மூலப்பொருட்கள் பயன்பாடு
- சூழலுக்கு நேயமான பொதிகட்டல் பயன்பாடு (1 × 2 = 02 புள்ளிகள்)

**iv)** அ)

- நுகர்வோரது நேரடிப் பங்குபற்றல்
- விற்பனையாளருக்கும் கொள்வனவாளருக்குமிடையே நெருக்கமான தொடர்பு
- நுகர்வோர் நம்பகத்தன்மை பிரச்சினைகள் உருவாதல் (1 × 2 = 02 புள்ளிகள்)

ஆ) நுகர்வுப் பொருட்கள்

- இடைநடுவர்கள் அதிகம்
- விநியோகத்திற்காக விளம்பரப்படுத்தல் அதிகம் பயன்படுத்தப்படுதல்
- விநியோகத்திற்கு குறைவான அலகுக் கிரயம்
- ஒழுங்கமைக்கப்பட்ட விநியோக சில்லறை வலைப்பின்னல்

(1/2 × 2 = 01 புள்ளி)

கைத்தொழிற் பொருட்கள்

- இடைநடுவர்கள் குறைவு
- விநியோகத்திற்காக கூடுதலான விற்பனைப் பிரதிநிதிகள்
- விநியோகத்திற்கு அதிகளவான அலகுக் கிரயம்
- நிலையான விநியோக வலைப்பின்னல் இல்லை (1/2 × 2 = 01 புள்ளி)

**(v)** **அ) நுகர்வோருக்கு**

1. கட்டளையிடுதல் இலகு
2. உற்பத்திப்பொருட்களுக்கிடையே வேறுபடுத்த முடிதல்
3. போலியான பண்டக்குறிகளில் இருந்து பாதுகாப்பு
4. பண்டக்குறி விசுவாசம் அபிவிருத்தியடைதல் (1/2 × 2 = 01 புள்ளி)

**வணிகருக்கு**

1. நுகர்வோர் மனதில் பதிவுசெய்ய உதவியாக இருத்தல்
2. போட்டி அனுகூலம்
3. போட்டிக்கு இலகுவாக முகங்கொடுக்கலாம்
4. வணிக அடையாளத்தைப் பாதுகாக்கலாம்
5. இலகுவாக மேம்படுத்தலாம்
6. சட்டப் பாதுகாப்பு (1/2 × 2 = 01 புள்ளி)

**ஆ)** தனிப்பட்ட பண்டக்குறி

உற்பத்தியாளர்களிடமிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக சில்லறை வியாபாரிகளால் உருவாக்கப்படுகிறது. உதாரணம்: நிப்புண அரிசி (01 புள்ளி)

குடும்பப் பண்டக்குறி

கம்பனி ஒன்று ஒரு பண்டக்குறியின் கீழ் உற்பத்திப்பொருள் வரிசையைச் சந்தைப்படுத்துவது. உதாரணங்கள்: MD, ஹரிச்சந்திரா (01 புள்ளி)

**07) i)** அ) உழைக்கும் வலுவுடன் காணப்படும் எந்த ஒரு வளமும் வணிகத்தில் நிதி எனக் கருதப்படும். (01 புள்ளி)
உதாரணம்: சரக்கிருப்பு, வாகனங்கள், நிலம், கட்டடம், முதலீடு (01 புள்ளி)

**ஆ) பணம்**

- உழைக்கும் வலு இல்லை
- மிகவும் உயர்வான திரவத்தன்மை
- வெளியிடும் அதிகாரம் உள்ளது
- நாணய அலகில் கணக்கிடப்படுவது $(1/2 \times 2 = 01$ புள்ளி)

**மூலதனம்**

- உழைக்கும் வலு உள்ளது
- குறைவான திரவத்தன்மை
- அப்படி ஒரு நிறுவகம் எதுவும் இல்லை
- அப்படி எதுவும் இல்லை $(1/2 \times 2 = 01$ புள்ளி)

**ii)** அ) **ஒதுக்க மூலதனமாக்கல்**

பங்குகளாக விநியோக ஒதுக்கங்கள் → ஒதுக்கங்கள் மூலதனத்திற்கு மாற்றப்பட்டது

**சந்தை மூலதனமாக்கல்**

கம்பனிப் பங்குகளின் மொத்தச் சந்தைப் பெறுமதி → உடைமையாண்மையையும் பெறுமதியையும் குறிக்கின்றது. (02 புள்ளிகள்)

ஆ)

- பொருளாதார செயற்றிறன் பற்றிய புரிந்துகொள்ளலை வழங்குகிறது
- கம்பனி செயற்றிறனை எடுத்துக் காட்டுகிறது
- ஏனைய கம்பனிகளை பங்குச் சந்தையில் ஒப்பிடலாம்

- முதலீட்டின் தீர்மானத்தை மேற்கொள்ளலாம்
- பொருளாதார செயற்றிறனை மதிப்பிட முடியும். (1/2 × 4 = 02 புள்ளிகள்)

**(iii) அ) ஊழியருக்கு:**

- உளவியல் ரீதியான அழுத்தங்கள் குறைவடைதல்
- கலாசார முரண்பாடுகள் குறைவடைதல்
- மனவுறுதியூடாக ஊழியர் ஊக்கப்படுத்தப்படல்
- ஊழியர் இலகுவாக நிறுவனத்துடன் இணைந்து கொள்ளக்கூடியதாக இருத்தல்

(1/2 × 2 = 01 புள்ளி)

- **நிறுவனத்திற்கு:**
- எதிர்பார்க்கப்பட்ட பணியை (இலக்கை) ஊழியர் இலகுவாக நிறைவேற்றுவார்
- அநாவசியமற்ற கிரயங்களைக் கட்டுப்படுத்தலாம்
- வித்தியாசமான தரப்பினருக்கிடையிலான முரண்பாடுகள் குறைக்கப்படும்
- ஊழியர்களை மேற்பார்வை செய்தல் இலகுவாக இருக்கும்
- ஊழியர் இலகுவாக நிறுவனத்துடன் இணைந்து கொள்ளக்கூடியதாக இருத்தல்

(1/2 × 2 = 01 புள்ளி)

**(b) வேலையை மீள் இடநிலைப்படுத்தல்:**

- செயற்றிறன் குறைந்தமைக்கான காரணங்களைக் கண்டறிதல்
- பயிற்சியளித்தல்
- இடமாற்றங்கள்
- ஊழியரது மனத்தாங்கல்களை புலனாய்வு செய்தலும் தீர்த்து வைத்தலும்
- வேலையை மீளுருவாக்கம் செய்தல்

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

**(iv)**

**அ)**

- வேலை செய்யவேண்டிய இடமும் வேலைக்குச் சமூகமளிக்க வேண்டிய தினமும்
- தொழில்தருநர் பெயர் முகவரி
- தொழில்பெறுனர் பெயரும் வேலையில் இணைந்து கொள்ள வேண்டிய தினமும்
- வேலை தொடர்பான விதிமுறைகளும் நிபந்தனைகளும்
- தொழில்தருநர் மற்றும் தொழில்பெறுனர் ஆகியோரின் கையொப்பங்கள்

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

**ஆ)**

- எச்சரிக்கை
- குற்றத்தின் தன்மையின் அடிப்படையில் தண்டனை இருத்தல் வேண்டும்
- தண்டனை ஆள்சாராததாக இருத்தல் வேண்டும்
- குற்றத்தின் பின்னர் உடனடியானதாக தண்டனை இருத்தல் வேண்டும்

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

**V) அ)**

- உயர்வான உற்பத்தித்திறன்
- மகிழ்வான வேலைத்தலம்
- வீண் விரயங்கள் குறைவு
- ஊழியர் வரவின்மை குறைவாக இருத்தல்
- ஊழியர் புரள்வு குறைவாக இருத்தல்
- ஊக்கப்படுத்தப்பட்ட வேலைத்தலம்
- கைத்தொழில் பிணக்குகள் காணப்படமாட்டாது (1/2 × 4 = 02 புள்ளிகள்)

**ஆ)**

- கைத்தொழில் பிணக்குகள் தொடர்பில் தொழில்தருனருக்கும் தொழில் பெறுனர்களுக்குமிடையே ஏற்படும் ஒப்பந்தம் கூட்டு உடன்படிக்கை ஆகும்.
- இவ்வுடன்படிக்கையானது கைத்தொழில் பிணக்குகளைத் தவிர்க்கும் வகையில் சேவைகள் தொடர்பிலான விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் உள்ளடக்கியிருக்கும். (01 புள்ளி)

**நோக்கங்கள்:**

- தைத்தொழில் உறவில் அமைதியைப் பேணல்
- பிணக்குகளைத் தவிர்த்தல்
- பரஸ்பரம் இரண்டு தரப்பினரதும் உரிமைகளைப் பாதுகாத்தல்
- சட்டம் மற்றும் உடன்படிக்கையினால் வழங்கப்பட்ட வகையில் மேலும் சாதகமான நிபந்தனைகளை உருவாக்குதல் (1/2 × 2 = 01 புள்ளி)

**08. i)**

- வாடிக்கையாளர் பின்னூட்டல்களைச் சேகரிக்க
- விசாரணைகளுக்குப் பதிலளிக்க
- 24 மணி நேர சேவையை வழங்க
- முறைப்பாடுகளைப் பதிவு செய்ய
- வாடிக்கையாளர் தேவைகளுக்கு வழிகாட்ட (1/2 × 4 = 02 புள்ளிகள்)

**ஆ)**

- தொழிநுட்ப அறிவுப் பற்றாக்குறை
- உயர்வான கிரயம்
- முறைமை தோல்வியடைதல்
- இணையத் தாக்குதல்
- விசேடத்துவமான வசதிகள் தேவைப்படுதல்
- பாதுகாப்பு மற்றும் தனித்துவப் பிரச்சினைகள் (1/2 × 4 = 02 புள்ளிகள்)

**ii) அ)**

- அலுவலகத் தன்னியக்க முறைமை
- அறிவுப் பணி முறைமை (1 × 2 = 02 புள்ளிகள்)

ஆ)

- சமூக ஊடக வலைப்பின்னல்
- இணையம்
- வலைத்தளங்கள் (Websites)
- மின்னஞ்சல்
- இணைய சந்தைப்படுத்தல் (1/2 × 4 = 02 புள்ளிகள்)

**iii) அ)**

- **தந்திரோபாயத் தகவல் முறைமை** –

  திட்டங்களை வகுப்பதற்காக உயர் மட்ட முகாமையாளர்களால் பயன்படுத்தப்படும் தகவல்கள். உதாரணங்கள்: மூலதன வரவு செலவுத் திட்டத் தகவல், இலட்சிய நோக்குக் கூற்று

- **செயற்பாட்டுத் தகவல் முறைமை –**

  நாளாந்த நடவடிக்கைகளுக்காக கீழ் மட்ட முகாமையாளர்களால் பயன்படுத்தப்படும் தகவல்கள். உதாரணங்கள்: ஊழியர் வருகை, காசுப் பெறுவனவும் கொடுப்பனவும்

  (1 × 2 = 02 புள்ளிகள்)

ஆ)

1. **ஊழியர்களின் தினசரி வரவைப் பதிவு செய்தல்**

   - கொடுக்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை

2. **வணிகத்தில் கற்கைத் தொகுதியை (module) உருவாக்குதல்**

   - அறிவுப் பணி முறைமை

3. **கம்பனியின் முதலீட்டை மதிப்பிடுதல்**

   - தீர்மான ஆதரவு முறைமை

4. **விற்பனைகள் மற்றும் கடன்கள் பற்றிய தகவல்களை அறிக்கையிடுதல்**

   - கொடுக்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

**iv)** **அ)** வணிகத் திட்டமானது

- நீர் செல்ல வேண்டிய பாதையை தெரிந்துகொள்வதற்கு
- தேவையான நிதி வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அவற்றைப் பேணுவதற்கும்
- வணிகத்தை ஒழுங்கமைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும்
- அவசியமான வளங்களை இனங் காண்பதற்கு
- நிறுவனத்தின் பிரதான பதவிநிலைகளை ஊழியர்களுக்கு கவர்ச்சிகரமானதாக்குவதற்கு

உதவி புரியும். (1 × 2 = 02 புள்ளிகள்)

**ஆ)**

- வணிகத்தை நவீனமயப்படுத்தும்போது
- வணிகத்தை விரிவுபடுத்தும்போது
- வணிகத்தை ஒருங்கிணைக்கும்பேது (1 × 2 = 02 புள்ளிகள்)

**v) அ)**

- எதிர்கால மனித வளத் தேவையையும் கிரயத்தையும் எதிர்வுகூற
- மனித வளத்தை வினைத்திறனாகப் பயன்படுத்த
- நிறுவனத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்கு
- ஆட்சேர்ப்புக்கான கிரயத்தைக் குறைக்க
- புயிற்சிக்கான தேவைகளை இனங்காண
- திறனுடைய ஊழியர்களைக் கவர (1/2 × 4 = 02 புள்ளிகள்)

**ஆ)**

- வணிகத்தினதும் உடைமையாளரினதும் பெயர்
- வணிகம் தொடர்பான வரலாறு
- வணிகத்தின் தூரநோக்கு, இலட்சியநோக்கு மற்றும் இலக்குகள்
- தேவையான மொத்த முதலீடு, கடன், உடைமையாளரின் நிதிப் பங்களிப்பு
- வுணிகத்தின் உற்பத்திப்பொருள் / சேவைகள் தொடர்பான விபரங்கள்
- பிரதான முகாமைத்துவ அணி (1/2 × 4 = 02 புள்ளிகள்)